வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 31.05.2023 புதன்கிழமை | இதழ் : 173 | பக்கங்கள் : 16

## ஓர் ஆண்டில் நீரில் மூழ்கி 148 பேர் பலி!

கொழும்பு, மே 31

2022 மே 22ஆம் நாள் முதல் 2023 மே 22ஆம் நாள் வரையான ஓர் ஆண்டில் நீரில் மூழ்கி 148 பேர் உயிரிழந்தனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

மீன்பிடிக்கும்போது ஏற்பட்ட விபத்துகள், நீர் நிலைகளில் போதையில் நீராடல், நீச்சல் திறனின்றி ஆபத்தை எதிர்கொள்ளல், நீர் நிலை குறித்த போதிய அறிவின்றி செயல்பட்டமை, முதலைகள் அதிகம் உள்ள நீரில் இறங்கியமை, தவறான முடிவு எடுத்து நீரில் விழுந்தமை

15

## வவுனியா இரட்டைக் கொலை; குற்றவாளிக்கு இரட்டை தூக்கு

வவுனியா, மே 31

இரட்டைக் கொலையை புரிந்து கொள்ளையில் ஈடுபட்ட ஒருவருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று இரட்டை தூக்குத் தண்டனை வழங்கியது.

வவுனியா சமளங்குளத்தில் கடந்த 2009 ஒக்ரோபர் 16ஆம் திகதி வீடொன்றினுள் புகுந்த குற்றவாளி அங்கிருந்த இருவரை சுட்டுக் கொலை செய்துவிட்டு கொள்ளையில் ஈடுபட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் 24 வயது (குற்றம் நடந்த சமயம்) நபர் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக 11 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டது.

நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெற்று, தற்போது 38 வயதாகும் குறித்த நபருக்கு எதிராக குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. இதையடுத்து, வவுனியா

15

## மக்களே; சூரிய ஒளியை நேரடியாக பார்க்காதீர்கள்!

### தேசிய கண் மருத்துவமனை

கொழும்பு, மே 31

சிறுவர்கள் மற்றும் பொது மக்கள் நேரடியாக சூரிய ஒளியை பார்க்க வேண்டாம். மீறினால் பார்வை பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்று தேசிய கண் மருத்துவமனையின் மூத்த மருத்துவர் பிரசாத் கொலம்பகே அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், சூரிய ஒளி நேரடியாக படும்பட்சத்தில் கண்கள் பாதிக்கப்படும். நல்ல தரமான 'சன் கிளாஸ்' அணிய வேண்டும். நேரடி சூரிய ஒளியில் கண்கள்

15

## ஓகஸ்டில் ஏ. எல். பெறுபேறு

கொழும்பு, மே 31

க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜய சுந்தர தெரிவித்தார்.

விடைத்தாள் மதிப்பீடு தற்போது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. விஞ்ஞான பாடங்களின் விடைத்தாள் மதிப்பீடு ஜூன் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் - என்றார்.

அத்துடன், விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கு வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிக்குமாறு திறை சேரியிடம்

15

# மத கலவரம் ஏற்படாமல் தடுக்க அரசு நடவடிக்கை

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



கொழும்பு, மே 31

**நாட்டில் இன அல்லது மத முரண்பாடுகள் மீண்டும் தலைதூக்காமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று காலை வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும்,

பல்வேறு தரப்பினரிடையே முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சிக்கும் குழுக்கள் தொடர்பில் சில புலனாய்வுத் தகவல்கள் ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளன. இனக் கலவரங்கள் மற்றும் ஏனைய பயங்கரவாத செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள நாடு என்ற வகையில், வன்முறையைத் தூண்டும் நபர்களைத் தடுக்கக் கடுமையான தீர்மானங்கள்

15

## இறக்குமதியாகும் பழங்களில் ஈயம்

கொழும்பு, மே 31

இறக்குமதி செய்யப்படும் சில பழங்களில் ஈயம் அதிகளவில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 முதல் 2022 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்பு பிரிவு மேற்கொண்ட ஆய்விலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்த நிலைமை, பொதுமக்களின்

15

## மாட்டிறைச்சி உண்ணாதீர்கள்

கொழும்பு, மே 31

மாடுகளுக்கு வைரஸ் நோய் பரவி வருவதால் இறைச்சியை உட்கொள்வதை தவிர்க்குமாறு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கில் கிளிநொச்சியிலும்,

வடமேல் மாகாணத்திலும் மாடுகளுக்கு 'லம்பி ஸ்கின்' எனப்படும் தோல்

15

## "சமூக வலைதளங்கள் மூலம் பதற்றத்தை ஏற்படுத்த சதி"

கொழும்பு, மே 31

சமூக வலைதளங்கள் மூலம் இனங்களுக்கு இடையில் பதற்றத்தை ஏற்படுத்த பல்வேறு குழுக்கள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய பாதுகாப்பு சபைக்கு அண்மையில் தெரிவிக்கப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் பந்துல

15

## நாட்டில் மத ஒற்றுமையை சீர்குலைப்போர் கைதாவர்

### பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, மே 31

மத ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு ஒரு போதும் இடமளிக்கப்படமாட்டாது. அத்தகைய செயல்களில் ஈடுபடும் நபர்கள் மற்றும் குழுக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் அறிவித்துள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்

15

## 2,000 ஏக்கர் காணி பிடிக்க வரைபடம் என்பது பொய்

### அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மே 31

யாழ். மாவட்டத்தில் 2,000 ஏக்கர் காணிகள் வனவள பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமானது என்று வர்த்தமானி அறிவிப்பு வெளியிடுவதற்

15

## வடக்கில் விபத்துக்களால் 29 நாட்களில் 16 பேர் பலி!

14

## இலங்கையின் இறையாண்மையை பாதுகாக்க சீனா துணைநிற்கும்!

### பிரதமருக்கு சீன பிரதி அமைச்சர் உறுதி



கொழும்பு, மே 31

இலங்கையின் இறையாண்மை காக்கவும் சமூக, பொருளாதார வளர்ச்சியிலும் சீனா எப்போதும் துணைநிற்கும் என்று அந்த நாட்டின் வெளிவிவகார பிரதி அமைச்சர் சென் வெய் டாங் தெரிவித்துள்ளார்.

15

## 4,200 ஆசிரியர்கள் கிழக்குக்கு விரைவில் நியமிக்கப்படுவர்!

### கல்வி அமைச்சர் சுசில் உறுதி

கொழும்பு, மே 31

கிழக்கு மாகாணத்தில் நிலவும் 4 ஆயிரத்து 200 ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் உறுதியளித்தார்.

நேற்று கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில், கிழக்கு மாகா

15

# ரணில் - மகிந்த இடையே எந்தப் போட்டியுமில்லை!

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

கொழும்பு, மே 31

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷ மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையில் எவ்வித போட்டியுமில்லை. ஜனாதிபதி சிறப்பாக செயல்படுகிறார். நாட்டு மக்கள் மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது என்கிறார்கள். பெரும்பான்மையான மொட்டுக் கட்சியினர் வாக்களித்தே அவரை நியமித்துள்ளோம். அவர் சரியாக வழிநடத்துகிறார்.


- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வட மேல் மாகாண ஆளுநரை சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மகிந்த ராஜபக்‌ஷ 30 வருடகால யுத்தத்தை வெற்றி கொண்டு நாட்டில் பெரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தவர். சீனாவுக்கு அடுத்ததாக எமது வளர்ச்சி வேகம் காணப்பட்டது. மகிந்த ராஜபக்‌ஷ தேர்தலில் போட்டியிட முடியாத அளவில் அரசமைப்பை மாற்றினார்கள். மகிந்த ராஜபக்‌ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எவ்வித போட்டியும் இல்லை. ஜனாதிபதி சிறப்பாக செயல்படுகிறார். நாட்டு மக்கள் மாற்றம் ஒன்று தேவைப்படுகிறது என்கிறார்கள். பெரும்பான்மையான மொட்டு கட்சியினர் வாக்களித்தே அவரை நியமித்துள்ளோம். அவர் சரியாக வழி நடத்துகிறார் என நினைக்கிறேன்.

நாமலுக்கு பிரதமர் பதவி வழங்கப்படவிருக்கிறதா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர்,

அவ்வாறு எந்தவொரு பேச்சும் இடம்பெறவில்லை. பிரதமர் ஒருவர் இருக்கிறார். இவை அனைத்து பிரச்னைகளும் குழப்பங்களை ஏற்படுத்தும் கதைகள். நாமல் அதற்கு அகப்படமாட்டார் - என்றார். (ஐ)





இருபாலை தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 13 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் , 14ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளது.

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# சொற்பொழிவு

வடமராட்சி, மே 31

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

'முருகன் பெருமை' என்னும் தலைப்பில் ஆசிரியர் ஜெ. கோபிநாத் இந்த சொற்பொழிவை ஆற்றுவார். (ஐ-02)

# ஜனாதிபதியின் செயலரின் வீட்டுக்குள் புகுந்தவர் கைது

கொழும்பு, மே 31

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் களுத்துறை - பாணந்துறை - பின்வத்தை இல்லத்துக்குள் நேற்று பிற்பகல் நுழைய முயன்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் வீட்டின் சுவரில் இருந்து குதித்து தோட்டத்துக்குள் நுழைந்தபோது, வீட்டின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் அவரைப் பிடித்தார். சந்தேக நபர் பொலிஸ் கான்ஸ்டபிளுடன் சண்டையிட்டு தப்பிச் சென்றார். சம்பவம் தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர் பின்வத்தை பொலிஸாருக்கு அறிவித்ததன் பிரகாரம் பொலிஸ் குழுவொன்று வந்து அப்பகுதியில் தேடுதல் நடத்தியது. ஆட்களற்ற வீடொன்றில் பதுங்கியிருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் காலி பகுதியைச் சேர்ந்த வயதுடையவர் எனவும் அவர் போதைப் பொருளுக்கு அதிக அடிமையானவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர் திருட வந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ஐ)

# மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் காலமானார்!



கொழும்பு, மே 31

மலையக மக்கள் முன்னணியின் பிரதி தலைவர் ஏ. லோரன்ஸ் 71 ஆவது வயதில் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

பேராதனை போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் காலமானார். 1952 ஆம் ஆண்டு பிறந்த அவர் தமது ஆரம்ப கல்வியை தலவாக்கலை ஹொலிரூட் தோட்ட பாடசாலையில் கற்றார்.

1970 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர், கொழும்பு பல்கலைக் கழகத்தில் தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார். 1989 ஆம் ஆண்டு மலையக மக்கள் முன்னணியில் இணைந்தவர், பிரதி தலைவராக பதவி உயர்ந்ததுடன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளராகவும் செயல் பட்டிருந்தார் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன, மதவாத பிரச்னைக்கு முற்றுப்புள்ளி எப்போது?

## ஞானசார தேரர் கேட்கிறார்

கொழும்பு, மே 31

இன, மதவாத பிரச்னைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும் என பொதுபல சேனவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாள் சந்திப்பிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

எனக்கு தெரிந்த காலத்தில் இருந்தே நாட்டில் இன, மதவாத பிரச்னைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டுமென அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, ஏனைய மதத்தவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்த மதத்தை திட்டமிட்டு அவமதிக்கிறார்கள். இது தொடர்பில் சமூகவலைத்தளங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. பாராளுமன்றத்தில்கூட பேசுகிறார்கள். முன்னாள் எம். பி. ஒருவர் என்னை தூக்கிலிட வேண்டுமென்கிறார்.

மத நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள விசேட பொலிஸ் பிரிவை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இது வொரு நல்ல விடயம் - என்றார். (ஐ)

# சிறுமியின் அரைநிர்வாண படம் வெளியிட்டவர் கைது

கொழும்பு, மே 31

16 வயதுக்கு உட்பட்ட சிறுமியின் அரை நிர்வாண ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகளை எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியக அதிகாரிகள் சந்தேகநபரான பெண்ணை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உலகளாவிய ரீதியில் இயங்கும் அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்றின் அங்கத்தவர் என்பதுடன் மனித உரிமைகள் அமைப்பு ஒன்றின் தேசிய ஊடகப் பணிப்பாளரும் என்று தெரிய வருகின்றது.

சிறுமியின் அரைநிர்வாண ஒளிப்படங்கள், காணொலியை சமூக ஊடகங்களில் வெளியிடுவேன் என்று சிறுமியின் குடும்பத்தை அச்சுறுத்திய அவர், பின்னர் அவற்றை வலை தளங்களில் பதிவேற்றியுள்ளார். இதன் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், இந்த வழக்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஐ)

# காணி மோசடியாக விற்பனை புத்தூர் நொத்தாரிசு கைது!

யாழ்ப்பாணம், மே 31

காணியை மோசடியாக விற்பனை செய்வதற்காக போலியான கையொப்பம் உறுதி தயாரித்த குற்றச்சாட்டில் புத்தூரை சேர்ந்த நொத்தாரிசு ஒருவர் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விசாந்த தலைமையிலான விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு கொடிகாமம் இத்தாவில் பகுதியில் போலியான கையெழுத்திட்டு உறுதி தயாரித்த குற்றச்சாட்டிலேயே இவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

காணியை மோசடியாக விற்பனை செய்தவர்களும் விரைவில் கைது செய்யப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மாணவர்க்கான பஸ் சேவைக்கு 30 வீத கட்டணம் அறிவிட முடிவு

கொழும்பு, மே 31

சிசு செரிய பாடசாலை பஸ் சேவைக்கான செலவில் 30 வீதத்தை பெற்றோரிடமிருந்து அறவிடுவதற்கு அரசாங்கத்துக்கு யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக சேவைக்கான செலவை அரசாங்கத்தால் தாங்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
31.05.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## புதுடில்லி அழைக்குமா?

தமிழ்த் தேசிய கட்சிகள் புதுடில்லிக்கு செல்லப் போகின்றன என்று அவ்வப்போது செய்திகள் வருவதும் - பின்னர் அந்தச் செய்திகளை கட்சிகளின் தலைவர் என்போர் மறுப்பதும் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் ஒரு சங்கதியாகும். உண்மையில், இவ்வாறான செய்திகளை கசியவிடுவதும் இதே கட்சிகள்தான். புதுடில்லிக்கு வருமாறு ஒருமுறை அழைப்பு வந்ததும் அந்த அழைப்புக்கு சம்பந்தன் வழங்கிய பதிலும் தமிழ் அரசியல் சூழலோடு பரீட்சயமான அனைவருக்கும் நினைவிலிருக்கக்கூடும்.

உலகளவில் மிகவும் சக்திவாய்ந்த நபர்களில் ஒருவராகக் கணிக்கப்படுபவர் இந்திய பிரதமர் நரேந்திரமோடி. அவ்வாறான ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்திப்பதற்கு அனுமதியளித்திருந்தார். இந்த அடிப்படையில், இந்திய வெளிவிவகார அமைச்சு கூட்டமைப்பை புதுடில்லிக்கு அழைத்திருந்தது. மாவையின் மகனுக்கு திருமணம் - அதற்கு செல்ல வேண்டியிருக்கின்றது - எனவே பிறிதொரு நேரத்தைத் தந்துதவவும் - இதுதான் இந்தியத் தூதரகத்துக்கு சம்பந்தன் வழங்கிய பதில். இதற்கு பின்னர் புதுடில்லியிலிருந்து அழைப்பு வருமென்று எந்த அடிப்படையில் எதிர்பார்க்கலாம்?

கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளில் ஒன்றான ரெலோவின் ஏற்பாட்டில், பிறிதொரு பங்காளிக் கட்சியான சித்தார்த்தன் தலைமையிலான டி. பி. எல். எவ்வின் ஆதரவுடன் இந்திய பிரதமருக்குக் கடிதம் எழுதும் முயற்சியொன்று இடம்பெற்றது. பல்வேறு இழுபறிகளுக்குப் பின்னர், சம்பந்தனின் கையெழுத்துடன் குறித்த கடிதம் இந்தியத் தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், கடிதம் இந்திய பிரதமரின் செயலகத்துக்கு செல்வதற்கு முன்னர் கொழும்பிலுள்ள பதிரிகையாளர்கள் அனைவரின் கைகளிலும் இருந்தது. ஒரு பிராந்திய சக்தியொன்றின் பிரதமருக்கு அனுப்பும் கடிதத்தைக்கூட நேர்த்தியாக அனுப்பும் வல்லமை இல்லாதவையாக இருந்தன குறித்த கட்சிகள். இவ்வாறானதொரு கடிதத்துக்கு எவ்வாறு இந்தியப் பிரதமரின் அலுவலகத்திலிருந்து பதில் வரும்?

இதன் பின்னர், இந்திய பிரதமரிடமிருந்து தங்களுக்கு அழைப்பு வருமென்னும் கதையொன்றையும் கட்சிகள் கூறமுற்பட்டன. வலிந்து பல தடவைகள் இந்தியத் தூதரகத்தை குறித்த கட்சிகளின் தலைவர்கள் அணுகியிருந்தனர். ஆனால், இன்றுவரையில் புதுடில்லியிலிருந்து சாதகமான பதில் வரவில்லை. அவ்வாறானதொரு பதில் வருமென்று எதிர்பார்ப்பதும் ஒரு கதையாகவே முடிவுறலாம். ஏனெனில், புதுடில்லி கருத்தில்கொள்ளத்தக்க தகுதியோடு தமிழ்த் தேசிய கட்சிகள் இருக்கின்றனவா என்பதே இங்கு கருத்தில்கொள்ள வேண்டிய கேள்வியாகும்.

தமிழ் கட்சிகளிடம் தெளிவான அணுகுமுறைகள் இல்லை. இந்த நிலையில் புதுடில்லி எதற்காக தமிழ் கட்சிகளை அழைக்க வேண்டும்? என்ன விடயங்களை அழுத்துவதற்காக தமிழ் கட்சிகளை இந்தியா அணுக வேண்டும்? இந்தக் கேள்விக்கு தமிழ் சூழலிலேயே தெளிவான பதில்கள் இல்லாதபோது புதுடில்லியிடம் எவ்வாறு பதிலை எதிர்பார்க்க முடியும்?

தமிழ் கட்சிகளின் புதுடில்லி கதை வெறும் அவ்வப்போது ஊடகங்களை அலங்கரிக்கும் செய்தியாகவே சுருங்கிப்போகலாம். புதுடில்லி அண்மைக்காலத்தில் தமிழ் கட்சிகளை அழைப்பதற்கான வாய்ப்பு மங்கலான ஒன்றாகும்.

# மத பதற்றத்தை தூண்டும் கருத்துகள் பின்னணியில் அரசியல் நோக்கங்கள்

## கொழும்பு பேராயர் இல்லம்

கொழும்பு, மே 31

நாட்டில் சிலர் மதப் பதற்றத்தை தூண்டும் வகையில் வெளியிடும் கருத்துகளின் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இருக்கலாம் என கொழும்பு பேராயர் இல்லம் தெரிவித்துள்ளது.

மதங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை வெளியிட்டு மதங்களுக்கு இடையே மோதல்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் அண்மை நாட்களில் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கொழும்பு பேராயரின் ஊடக பேச்சாளர் அருட்தந்தை ஜூட் கிருஷாந்த தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் அண்மை நாட்களில் மதங்களுக்கும் அதன் படிப்பினைகளுக்கும் எதிராக பல்வேறு தரப்பினரால் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியிலேயே, மதங்கள் தொடர்பிலான விமர்சனங்கள் அதனை பின்பற்றும் மக்கள் மத்தியில் சீற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தும். இந்த நிலையில், குறித்த விமர்சனங்களின் விளைவாக நாட்டில் வன்முறைகள் கட்டவிழ்க்கப்படலாம்.

இவ்வாறான மதப் பிரச்னைகளை ஏற்படுத்துவதற்காக வெளியிடப்படும் கருத்துகளுக்கு பின்னால் மோசமான அரசியல் நோக்கங்கள் இருக்கலாம். இது தொடர்பில் அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்." எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சுட்டவரை அடையாளம் காண உதவுமாறு பொலிஸ் கோரிக்கை

கொழும்பு, மே 31

கடந்த மே 20ஆம் திகதி பொரளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லெஸ்லி ரணகல மாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவ புலனாய்வுத் துறை அதிகாரியான லெப். கேணல் துவான் முத்தலிப் கொலை வழங்கில் கைது செய்யப்பட்ட பின் விடுவிக்கப்பட்ட ஒருவர் இந்த துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டார்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்ட நபர் தலைமறைவாகியுள்ளார். இவ்வாறு தலைமறைவானவர், லங்கா ஏக நாயக்க என்ற 33 வயதுடைய நபர் கொத்தடுவ பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் விடுதி ஒன்றின் முகாமையாளர் எனவும் அவரின் இடது கை மணிக்கட்டில் இருந்து மேல்நோக்கி பறவையின் இறகு கறுப்பு பச்சை குத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சந்தேக நபர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால், பணிப்பாளர் கொழும்பு குற்ற பிரிவு - 071 859 1733,

நிலைய பொறுப்பதிகாரி கொழும்பு குற்றப் பிரிவு - 071 85917335

நிலைய அதிகாரி விசாரணை பிரிவு - 071 8596503 ஆகியோருக்கு அறிவிக்குமாறு பொது மக்களை பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

# பட்ட சான்றிதழ் வழங்காமல் இழுத்தடிப்பதாக குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம், மே 31


யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா முடிந்து பல மாதங்களாகியும் பட்டதாரிகளுக்கான பட்ட சான்றிதழ்களை வழங்குவதற்கு வெளிவாரிக் கற்கைகள் பிரிவு இழுத்தடித்து வருகிறது என்று பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

2021ஆம் ஆண்டு வரை இறுதி பரீட்சைக்குத் தோற்றி, 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டடம் வழங்கப்பட்ட வியாபார முகாமைத்துவமாணி, வணிக மாணி, கலைமாணி பட்டதாரிகளே பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படாமையால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்களுக்கு உரிய காலத்தில் பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படாமை குறித்து தாம் கடிதம் மூலம் துணைவேந்தருக்குத் தெரியப்படுத்தியதன் காரணமாகவே தமது பட்டச் சான்றிதழ்கள் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுகின்றன என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பல்கலைக்கழகத்துக்கு அருகில் அமைந்துள்ள திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்துக்கு நேரில் சென்று தமது பட்டச் சான்றிதழ்களை வழங்குமாறு கேட்டபோது, துணைவேந்தரிடம் முறையிட்டது போல துணைவேந்தரிடமே போய் பட்டச் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளுங்கள்"என்று அங்குள்ள அதிகாரிகள் தமக்கு கூறினர் என்றும் அச்சிடுவதற்கு வசதிகள் இல்லை, மட்டை வரவில்லை ஏற்றுக் கொள்ளப்பட முடியாத காரணங்களையும் காட்டுகின்றனர் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் சாடினர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

மே - 31 புதன்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 17
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மனநிறைவு பெறும் நாள்.

**இடபம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் விலகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். மிகவும் கவனம் தேவை. வாகனத்தை சீர் செய்வீர்கள். புது யுக்திகளை கையாளுவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். புது தொடர்பு கிடைக்கும். உழைப்பிற்கு அதிகாரிக ளின் மூலம் அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம். விட்டு கொடுத்து போக வேண்டிய நாள்.

**கன்னி**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**துலாம்**
உங்களின் அணுகுமுறையால் மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். புது தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
மற்றவர்களால் செய்ய முடியாத காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உங்களாலும் முடியும் என்று சாதித்துக் காட்டும் நாள்.

**தனுசு**
உற்சாகமடைவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. தடைபட்ட வேலைகள் முடியும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில சூட்சமங்களை புரிந்துக் கொள்வீர்கள். எதிர்பாராத நன்மைகள் கிட்டும் நாள்.

**மீனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

# பேனா நினைவுச் சின்னம் வழக்கு மீளப் பெறப்பட்டது

சென்னை, மே 31

கருணாநிதிக்கு பேனா நினைவுச் சின்னம் அமைக்கத் தடை கோரி தொடர்ந்த வழக்கு மீளப் பெறப்பட்டுள்ளது.

தூத்துக்குடியை சேர்ந்த வழக்கறிஞர் பி. ராம்குமார் ஆதித்யன் சென்னை நேப்பியர் பாலம் முதல், திருவான்மியூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் வரையிலான 14 கி. மீ. தூர பகுதிகளை சுற்றுச்சூழல் எளிதில் பாதிக்கக்கூடிய பகுதியாக அறிவிக்கக் கோரி தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வில் கடந்த ஆண்டு பிரதான வழக்கு தொடர்ந்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த ஆண்டு டிசெம்பரில், இடையீட்டு மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில், கடற்கரை சூழலியல் பாதுகாப்பில் கடல் ஆமைகள் முக்கிய பங்குவகிக்கின்றன. இவற்றின் முட்டையிடும் மையமாக கடலோர மணல் பரப்பு உள்ளது. சென்னை கடலோர பகுதிகளான நேப்பியர் பாலம் முதல், திருவான்மியூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் வரையிலான 14 கிமீ தூரம் வரை ஆமைகள் முட்டையிடும் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் கடந்த 8 ஆண்டுகளில், ஜனவரிமுதல் மார்ச் மாதங்களில் மட்டும்1522 கடல்ஆமைகள் இறந்துள்ளன.

மெரினா கடற்கரையில் ஏற்கெனவே 3 முன்னாள் முதல்வர்களின் நினைவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நினைவிடம் 2.21 ஏக்கரில் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை நாம் அனுமதித்தால், அடுத்த 50 ஆண்டுகளுக்கு பிறகு ஏராளமான முன்னாள் முதல்வர்களின் நினை விடங்களை அங்கு காண நேரிடும்.

கருணாநிதியின் தமிழ் இலக்கிய பங்களிப்பை போற்றும் வகையில் பேனா நினைவு சின்னம் அமைக்கும் திட்டத்தை பரிந்துரைத்துள்ளது. அங்கு எந்த கட்டுமானங்களை எழுப்பினாலும், அது விதிமீறலாகும். எனவே பேனா நினைவு சின்னம் அமைக்க மத்தியசுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதி அளிக்க தடை விதிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த மனுவை மனுதாரர் திரும்பப் பெற்றுள்ளார். இது தொடர்பாக ராம்குமார் ஆதித்யன் கூறும்போது, ஹஹநான் இத்திட்டத்துக்கு சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கக்கூடாது எனக் கோரி மனுதாக்கல் செய்திருந்தேன். தற்போது அத்திட்டத்துக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்ட நிலையில், எனது கோரிக்கை காலாவதியாகி விட்டது. அதனால் மனுவை திரும்பப்பெற்றேன்” என்றார்.

இதனிடையே, பேனா நினைவுச் சின்னம் அமைப்பதைத் தடுக்கக் கோரி மீனவர் ஒருவரும், அ. தி. மு. க. கட்சியின் சார்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ்நாட்டில் 818 கோடி ரூபாய் சிங்கப்பூர் நிறுவனங்கள் முதலீடு

சென்னை, மே 31

ரோக்கியோவில் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஜப்பானை சேர்ந்த 6 நிறுவனங்களுடன் 818.90 கோடி (இந்திய) ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 2024 ஜனவரியில் நடக்க உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கவும் முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும் முதல்வர் ஸ்டாலின் அரசு முறைப் பயணமாக சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு சென்றுள்ளார். சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு ஜப்பான் சென்றுள்ள அவர், அங்கு முதலீட்டாளர்கள் மற்றும் ஜப்பான் நிறுவனங்களின் நிர்வாகிகள், உயர் அதிகாரிகளை சந்தித்து வருகிறார்.

இந்நிலையில், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு (ஜெட்ரோ) சார்பில் நேற்று நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார்.

இதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஜப்பானை சேர்ந்த 6 தொழில் நிறுவனங்களுடன் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம் ரூ. 818.90 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

# மக்கள் விரோத செயல் தொடரும் வரை அ. தி. மு. க. ஆர்ப்பாட்டங்களும் தொடரும்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, மே 31

தமிழ்நாட்டில் மக்கள் விரோத செயல்கள் தொடரும் பட்சத்தில் தி. மு. க. அரசுக்கு எதிரான அ. தி. மு. வின் போராட்டங்கள் தொடரும் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தி. மு. க. அரசை கண்டித்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அ. தி. மு. கவினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, கள்ளச்சாராய மரண விவகாரம், ஊழல் முறைகேடு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு, உள்ளிட்டவற்றை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

இந்நிலையில், தமிழ்நாடு முழுவதும் அ. தி. மு. க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் எழுச்சியுடன் நடைபெற்றதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சென்னை தவிர அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும், தி. மு. . அரசாங்கத்துக்கு எதிராகவும் முதலமைச்சர் பதவி விலக கோரியும், அ. தி. மு. க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் சிறப்பாக நடைபெற்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் ஊழல்களும் மக்கள் விரோத செயல்களும் தொடரும் பட்சத்தில் அ. தி. மு. கவின் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் தொடரும் என்று கூறியுள்ளார். (ஐ)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 2,500 கிலோ பீடி இலைகள் சிக்கின

தூத்துக்குடி, மே 31

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 2 ஆயிரத்து 500 கிலோ பீடி இலைகளை கடலோர கண்காணிப்பு பொலிஸார் கைப்பற்றி தூத்துக்குடியில் இருந்து கஞ்சா, குட்கா உள்ளிட்ட பொருட்கள் இலங்கைக்கு கடத்தப்பட்டு வருகிறது. அதனை தடுக்க கடலோர பொலிஸார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து பீடி இலைகள் இலங்கைக்கு கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

நேற்று அதிகாலை கண்காணிப்பில் ஈடுபட்டன பொலிஸாரை கண்டதும் கடற்கரையில் நின்ற சிலர் தப்பியோடினர். எனினும் ஒருவரை பொலிஸார் மடக்கி பிடித்தனர். அவர் செலுத்தி வந்த சிறிய லொறியை சோதனையிட்ட பொலிஸார், அதிலிருந்த 49 மூட்டைகளில் 2 ஆயிரத்து 500 கிலோ பீடி இலைகளை கைப்பற்றினர்.

இவற்றை கைப்பற்றிய பொலிஸார், தப்பியோடியவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். கைப் பற்றப்பட்ட பீடி இலைகள் இலங்கைக்கு கடத்தப்பட இருந்ததவை என்பது விசாரணைகளில் தெரிய வந்தது.(ஐ)

## மேலும் இரு விமான சேவைகளை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 31
இஸ்ரேல் எயார்லைன்ஸ் மற்றும் ஆர்க்கியா எயார்லைன்ஸ் ஆகிய விமான சேவைகளை இலங்கையில் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

விமான நிறுவனம் பொதுவாக இரண்டு ஆயுதம் தாங்கிய காவலர்களுடன் பயணிப்பதால், இதற்கு முன்னர் இலங்கையில் விமான சேவைக்கு அனுமதி வழங்கப்படவில்லை என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விமான சேவையை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் ஆர்க்கியா எயார்லைன்ஸ் இலங்கைக்கு நேரடி விமான சேவையை மேற்கொள்ளும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேலும் கூறினார்.

இதேவேளை, இஸ்ரேலில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பொது நினைவுத் தூபி அமைப்பது முரண்பாட்டை மேலும் வலுவாக்கும்

### சிவாஜிலிங்கம் கூறுகிறார்



யாழ்ப்பாணம், மே 31

**பொது நினைவுத் தூபி என்பது மேலும் முரண்பாடுகளை வலுப்படுத்தும் எனவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தமாட்டாது எனவும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிங்கள-தமிழ் மக்களுக்கு பொது நினைவுத் தூபி அமைப்பது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொது நினைவு தூபி என்பது மாறுபட்ட பிரச்னைகளை உடையவர்களுக்கு தீர்வாக செய்வது.

அது மேலும் முரண்பாடுகளை வலுப்படுத்துமே தவிர நிச்சயமாக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கோ அல்லது வேறு ஒரு விடயத்திற்கோ உதவமாட்டாது.

நினைவுத் தூபியில் பெரும்பாலான சிங்களவர்களும் , படை வீரர்களுமே அஞ்சலி செலுத்த முடியும்.

பொது நினைவு தூபியை இனப் பிரச்னையை மூடி மறைப்பதற்காக அமைக்கப்படும் ஒன்றாகவே பார்க்க முடியும்-என்றார். (அ)

## கொழும்பு இலகு ரயில் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க அங்கீகாரம்!

கொழும்பு, மே 31
ஜப்பானிய அரசாங்கத்தின் ஆதரவுடன் கூட்டாகச் செயல்படுத்தப்படவிருந்த கொழும்பு இலகு ரயில் போக்குவரத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலை தொடங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் ஜப்பானுக்கு விஜயம் செய்வதற்கு முன்னர், சர்வதேச சமூகத்துடனான இலங்கையின் நம்பகத்தன்மையை மீட்டெடுக்கும் முயற்சியில், இந்த திட்டத்தை மீள ஆரம்பிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சமீப காலங்களில், நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவிகளை வழங்கும் முன்னணி நாடுகளில் ஒன்றாக ஜப்பான் திகழ்கிறது, எனினும், சில திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகளை நிறுத்தியதன் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகளில் விரிசல் ஏற்பட்டது.

தொடர்ந்து, இலங்கை-ஜப்பான் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள இந்த சரிவை சரிசெய்யும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானுக்கான விஜயம் அமைந்திருந்தது.

டோக்கியோவுக்குப் புறப்படுவதற்கு முன்னர், கொழும்பு கொழும்பு இலகு ரயில் போக்குவரத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை ஜனாதிபதி பெற்றுள்ளார்- என்றார்.

மேலும், முதலீட்டுத் திட்டம் அல்லது வெளிநாட்டு உதவிக்காக இலங்கை வேறொரு நாட்டுடன் கைச்சாத்திடும் எந்தவொரு ஒப்பந்தமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அத்தோடு அத்தகைய ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டுவருவது பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும் என பரிந்துரைக்கும் முன்மொழிவுக்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# மலையக மக்கள் நிலை தொடர்பிலும் பிரிட்டன் கவனம் செலுத்தவேண்டும்!

### அந்த நாட்டு தூதுவரிடம் கோரிக்கை

கொழும்பு, மே 31
இலங்கையில் மலையக மக்களின் 200 ஆண்டு கால வரலாற்றில் 150 ஆண்டு காலம், அந்த மக்கள் பிரித்தானியரின் ஆட்சியின் கீழேயே வைக்கப்பட்டிருந்தனர். எனவே மலையகம் 200 தொடர்பில் பிரித்தானிய அரசும் கவனம் கொள்ளவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஷாரா ஹூல்டனிடம், நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜா இந்த வலியுறுத்தலை முன்வைத்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை நுவரெலியாவில், பிரித்தானிய தூதுவரை சந்தித்தபோது மலையக மக்களின் கரிசனைகள் குறித்து அவர், கருத்துக்களை பகிர்ந்துக்கொண்டார்.

1823 ஆண்டு காலப்பகுதியில் தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வந்த காலத்தில் இருந்து 1972 ஆண்டு இலங்கைக் குடியரசாகும் வரை மலையகப் பெருந்தோட்டச் சமூகத்தினரின் தொழில் மற்றும் சமூக நிர்வாகத்தினை பிரித்தானியரே மேற்கொண்டனர்.

எனவே இன்று 200 வருட மலையக வரலாற்றில் பெரும் பங்கு பிரித்தானியாவுக்கு உரியது.

இந்தநிலையில் பல்வேறு உரிமை மறுக்கப்பட்டவர்களாக இலங்கையில் வாழும் இந்த மக்கள் குறித்த கரிசனையை பிரித்தானியா வெளிப்படுத்தவேண்டும்.

இந்த மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிய இலங்கைக்கான பிரித்தானிய தூதரகம் ஓர் குறைகேள் அதிகாரியை அல்லது குழுவை நியமிக்கவேண்டும்.

அதன் ஊடாகத் தொகுக்கப்படும் தகவல்கள் ஆவணப்படுத்தப்படுமிடத்து, பல்வேறு உரிமை மறுக்கப்பட்ட இந்த மக்களின் பிரச்னைகளை சர்வதேசத்தின் முன்னிலைக்கு கொண்டு செல்லவும் தீர்வு பெறவும் வழியேற்படும்.

அத்துடன் பிரித்தானியரால் வழங்கப்பட்ட இலங்கைக் குடியுரிமையைப் பறித்த இலங்கை சுதேச அரசு, அதனை மீளவும் வழங்கும்போது வாக்களர் அந்தஸ்தினை மாத்திரம் வழங்கி உள்ளதே தவிர அவர்களை முழுமையான இலங்கைக் குடிமக்களாக ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே இந்த மக்களை அர்த்தமுள்ள குடிமக்களாக ஏற்றுக் கொள்ளச் செய்யும் பொறுப்பையும், பிரித்தானிய அரசு ஏற்று, இலங்கை அரசுக்கு அது தொடர்பில் வலியுறுத்த வேண்டும் எனவும் திலகராஜ் கோரிக்கை விடுத்தார். (அ)

# வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் புதிய கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, மே 31
வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் புதிய கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும் அல்லது ஜூன் முதலாம் திகதி முதல் தமது கடவுச்சீட்டைப் புதுப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் தங்கள் நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு செல்லாமல் ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும் என அதிகாரிகள் மேலும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஈ-பாஸ்போர்ட் நடைமுறைப்படுத்துவது குறித்தும் குழு ஆலோசித்ததுடன், இந்த செயல்முறையை விரைவுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு குழுவின் தலைவர் அறிவுறுத்தினார்.

இதன்போது ஒன்லைனில் விசா விண்ணப்பத்தில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேற்கூறிய நோக்கத்திற்காக, வெளிநாட்டவர்கள் சிரமமின்றி விஸாவைப் பெறுவதற்குத் தேவையான பொறிமுறையை விரைவாகத் தயாரித்து நடைமுறைப்படுத்துமாறும், இலங்கையின் சர்வதேச விமான நிலையங்களில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டினருக்கான வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஐரோப்பா போன்ற அதிக வருமானம் ஈட்டும் நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதன் முக்கியத்துவம் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுமாறும் தலைவர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

குழுவின் உறுப்பினர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான நிரோஷன் பெரேரா, எஸ்.எம்.எம்.முஷாரப், சாகர காரியவசம், யதாமினி குணவர்தன, ஹரிணி அமரசூரிய ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்ட அதேநேரம் குழுவின் தலைவரின் அனுமதியுடன் சந்திம வீரக்கொடி கலந்து கொண்டார். (அ)

## யாழ். இளைஞர் கனடாவில் ஆற்றில் மூழ்கி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 31
கனடாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பர்களுடன் ஆற்றில் நீராடச் சென்ற வடமராட்சி, கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் புலம்பெயர்ந்து கனடா சென்ற இளைஞர் நண்பர்களுடன் ஆற்றில் நீராடச் சென்ற சமயம் குறித்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் ஜன்சன் (வயது 28) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக அந்நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## பதவி துறக்கத் தயார்

### கூறுகிறார் சனத் நிஷாந்த

கொழும்பு, மே 31
தனது அமைச்சுப் பதவியை இழக்கத் தயார் என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

கஹட்ட கஸ்திகிலிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே சனத் நிஷாந்த இதனை கூறினார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு அயராது உழைத்த பல சிரேஷ்டர்கள் தற்போது பாராளுமன்றத்தில் பின்வரிசைகளில் அமர்ந்துள் ளனர்.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்டர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டாலும், தவறாக நடத்தப்பட்டாலும் ஒரு முடிவுக்கு வரவேண்டும். மக்களுக்கு சேவை செய்வ தற்கு அமைச்சுப் பதவி தேவை யில்லை.

ஒரு கட்சியாகவும், குழுவாகவும் முன்னேற எந்த தியாகத்தையும் செய்ய தயாராக உள்ளேன் -என்றார். (அ)

# மக்களின் வாக்குகளால் ரணில் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாது

## சுட்டிக்காட்டுகிறது ஐக்கிய மக்கள் சக்தி



**கொழும்பு, மே 31**

**பொதுஜன பெரமுன கட்சியினர் அதிகாரத்தை பாதுகாத்துக்கொள்ளவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளானது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.**

குருநாகலில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளானதால், மக்கள் தற்போது மிகவும் கஷ்டங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் அனுப்பும் பணத்தை செலவுகளுக்காக சமாளிக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை முன்னேற்றப்போவதாகக் கூறுகிறார்.

செலவிடப்படுவது ரணில் விக்கிரமசிங்க சேமித்த டொலர்கள் அல்ல. நாடு இன்னும் கடனைத் திரும்பச் செலுத்தவில்லை. அப்படியானால் நெருக்கடி அதே இடத்திலேயே இருக்கின்றது.

அமைச்சுப் பதவிகள் கிடைக்காத மொட்டுக்கட்சியினர் ரணில் விக்ரமசிங்கவை விமர்சிக்கின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்தை கடத்தி வந்த நிலையில் சிக்கினார்.

70 லட்சம் ரூபா செலுத்தி அவர் விடுதலையானார். அந்தப் பணம் எங்கிருந்து வந்தது. அவர் மீண்டும் முக்கிய பிரமுகர்களுக்கான முனையத்தின் ஊடாக வெளிநாடு சென்றார்.

அருந்திக பெர்னாண்டோ இலங்கைக்குள் பிரவேசிக்க முடியாதவரை நாட்டுக்குள் வரவழைக்கின்றார்.

அவருக்கு எதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை மக்கள் பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

துள்ளும் நபர்களை அச்சுறுத்தி ஏமாற்றுவதில் ரணில் விக்கிரமசிங்க திறமையானவர். இந்த உடன்பாட்டு அரசியலை முடிவுக்கு கொண்டு வர மக்கள் ஒன்று சேருவார்கள்.

நாங்கள் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை உருவாக்குவோம். கொழும்பை முற்றுகையிடப் போகிறோம் என்று கூறும் போது ராஜபக்ஷவினர் அஞ்சுகின்றனர்.

கொழும்பை முற்றுகையிடப்போவதாக ரணிலுக்கு ஆதரவளிப்போர் கூறுகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க மக்களின் வாக்குகள் மூலம் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாது. நாங்கள் மக்கள் ஆணையின் மூலம் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக தெரிவு செய்வோம்-என்றார். (அ)

# மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் பாசறை

யாழ்ப்பாணம், மே 31

சிறகுகள் அமையத்தின் சுற்றுச்சூழல் பிரிவின் ஏற்பாட்டில் தரம் 6, 7, 8 மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் பாசறை எதிர்வரும் ஜூன் 3 ஆம்,4 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை கொக்குவில் இராமகிருஸ்ணா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

செயற்பாடுகளை உள்ளடக்கியதான பயிற்சி பாசறையில் ஊடாக சூழலியல் விஞ்ஞானம் சார்ந்த விடயங்களை மாணவர்களுக்கு கொண்டு சேர்ப்பது இலக்காகவுள்ளது.

குறித்த பயிற்சி பாசறையில் துறைசார் வல்லுநர்கள் வளவாளர்களாகக் கலந்துகொள்வதுடன் மாணவர்களுக்கான பங்குபற்றுதல் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

பாசறையில் கலந்துகொள்ள பதிவினை www.sirakukal.live எனும் இணைப்பினூடாக பதிவுகளை மேற்கொள்வதுடன் மேலதிக விவரம் பெற - +94 77 678 5023 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (அ)

# எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது!

## காஞ்சன விஜேசேகர குற்றச்சாட்டு!

கொழும்பு, மே 31

சில இணையத்தளங்களில் வெளியிடப்பட்ட செய்திகளில் தனது சிறப்புரிமைகளை மீறப்பட்டுள்ளதாகவும் இது குறித்து பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழுவின் ஊடாக விசாரணை நடத்துமாறு சபாநாயகருக்கு கடிதமொன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்க பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் உண்மைக்கு புறம்பான தனிப்பட்ட செய்திகளை வெளியிடும் ஊடக நிறுவனங்களை பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவுக்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 24 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் ஊடகங்களில் பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் தனது சிறப்புரிமைகள் பாரியளவில் மீறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சபாநாயகருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை பல்கலைக்கழகங்களில் 2,000 விரிவுரையாளர் வெற்றிடம்!

கொழும்பு, மே 31

2000 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் காரணமாக அனைத்து பல்கலைக்கழகங்களிலும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

நிலைமையை சீர்செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்களுக்கு புதிய விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. (அ)

# யாழில் வீதி விபத்துக்களைத் தடுக்க இன்று முதல் விசேட வேலைத்திட்டம்!

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்



யாழ்ப்பாணம், மே 31

வீதி விபத்துக்களை தடுக்க யாழ்.மாவட்டத்தில் இன்று புதன்கிழமை முதல் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.

யாழ் குடா நாட்டில் அதிகரித்துள்ள விதி விபத்துக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். குடாநாட்டில் மே மாதம் மாத்திரம் 10 இற்கும் மேற்பட்ட வீதி விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதோடு வீதி விபத்துகளில் 10 ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் விசேட நடவடிக்கை ஒன்று இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்று முதல் யாழ்.குடாநாட்டில் போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோரை உரிய சட்ட நடவடிக்கைக்குட்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

அத்தோடு வீதி விபத்துக்கள் ஏற்படக்கூடியவாறு மஞ்சள் கடவைக்கு அண்மையில் வாகனங்களை நிறுத்துதல், போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்துதல் ,வேகமாக வாகனங்களைச் செலுத்துதல், தலைக்கவசம் இன்றி வாகனம் செலுத்துதல் போன்ற பல்வேறுபட்ட போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக இன்று முதல் முதல் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் 80 வீதமானவர்கள் போக்குவரத்து விதிமுறைகளை மீறியே தமது வழமையான செயல்பாடுகளை முன்னெடுக்கிறார்கள். குறிப்பாக தலைக்கவசம் அணியாது செல்கின்றார்கள். வேகமாகப் பயணிக்கின்றார்கள். நகரப்புறங்களிலும் வேகமாக வாகனங்களைச் செலுத்துகின்றார்கள். வீதிகளில் விபத்துக்களை ஏற்படுத்தக்கூடியவாறு வாகனங்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

எனவே இன்று முதல் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றும் போக்குவரத்து பொலிஸாரை போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணிபுரிப்புரை விடுத்துள்ளேன்.

குறிப்பாக யாழ்.நகரப் பகுதியில் காங்கேசன்துறை வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதிப் பகுதியில் வீதி விபத்துகள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதால் அந்த பகுதிகள் விசேட பொலிஸ் அணியினரால் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் விசேட வேலைதிட்டம் ஒன்றும் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே பொதுமக்கள் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்-என்றார். (அ)

# வடிவேல் சுரேஷ், ராஜிதவிடம் விளக்கம் கோருவதற்கு முடிவு

கொழும்பு, மே 31

பாராளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ் மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோரிடம், விளக்கம் கோர, ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர், ஜனக ரத்நாயக்கவை, பதவி நீக்குவதற்கான பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது செயற்பட்ட விதம் தொடர்பில், அவர்களிடம் விளக்கம் கோரப்படவுள்ளது.

குறித்த பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க, ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்.

அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது, சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை என்பதுடன், அது குறித்து கட்சிக்கு அறிவிக்கவில்லை.

எனவே, இது தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளருமான, லக்ஷ்மன் கிரியெல்ல, குறித்த இருவரிடமும் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளார்.

பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தமைக்கான காரணத்தை, ஒரு வாரத்திற்குள் அறியப்படுத்துமாறு, குறித்த இருவருக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில், லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையில் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சர்வதேச உடன்பாடு

## சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 31

**இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் கருவியாக, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை பயன்படுத்தப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.**

நடிகை நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டமை தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், சிறுபான்மையினரின் கருத்துச் சுதந்திரத்தின் நியாயமற்ற கட்டுப்பாடுகளுக்கு வழிவகுக்காத வகையில், வெறுப்புணர்வை வலியுறுத்துவதை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்ட அனைத்து சட்டங்கள், கொள்கைகள், கடுமையான முறையில் பயன்படுத்தப்படுவதை இலங்கை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

எனினும் இலங்கை அரசாங்கம், இந்த சர்வதேச சட்டத்தை, உள்நாட்டில் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதாக மன்னிப்புசபை குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் உடன்படிக்கையை அங்கீகரித்த பின்னர் இலங்கை கடைப்பிடிக்க உறுதியளித்த கடமைகளை உள்நாட்டு சட்டத்தில் அறிமுகப்படுத்துவதற்காகவே குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

எனினும் முரண்பாடாக, இலங்கை அதிகாரிகள் சிறுபான்மையினரை குறிவைக்கும் அடக்குமுறை கருவியாக இதனை பயன்படுத்துவதாக மன்னிப்பு சபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)



# கிளிநொச்சி பஸ் நிலையத்துக்கு அமைச்சர் டக்ளஸ் திடீர் விஜயம்

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலைய பகுதிக்கு அதிகாரிகள் சகிதம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டார்.

பஸ் நிலைய வளாகத்தில் ஏற்கனவே வியாபார நிலையங்களை வைத்திருந்தவர்களுக்கு மீண்டும் அதே இடத்தில் பகிர்ந்தளிப்பது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்ததுடன் அவர்களின் மேலதிக கோரிக்கைகளையும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதுச்செயலர் பதவியை துறப்பதற்கு நான் தயார்!

## கூறுகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, மே 31

"சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நான் காட்டிக்கொடுக்கவில்லை. அமைச்சுப் பதவி இல்லாமல் என்னால் அரசியல் செய்ய முடியும். அமைச்சுப் பதவிக்காக அலைபவர்களே கட்சிக்கு எதிராக சதி செய்கின்றனர். பொதுச் செயலர் பதவியை துறக்கவும் நான் தயார்"-என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

"எனது பெற்றோர் சுதந்திரக் கட்சியில் இருந்தவர்கள். நானும் சுதந்திரக்கட்சி ஊடாகவே அரசியல் பயணத்தை ஆரம்பித்தேன். கட்சிக்குள் என்னை ஓரங்கட்டினர். வலிகளைத் தாங்கிக் கொண்டு பயணித்தோம். இருந்தும் ஒதுக்கினர். அதனால்தான் 2001 இல் கட்சியை விட்டு வெளியேறினேன்." எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

"கட்சியின் வளர்ச்சி மற்றும் ஆதரவாளர்களின் நலனை முன்னிறுத்தியே நான் செயல்படுகின்றேன். ஆனால் வாழ்நாள் முழுவதும் அமைச்சராக இருக்க வேண்டும் என்ற நினைப்பில் வாழ்பவர்கள்தான், எனக்கு எதிராக பிரசாரம் முன்னெடுத்துவருகின்றனர்.

இக்கட்டான - சவாலான நிலையில்தான் சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை ஏற்றேன். கட்சியை கிராமிய மட்டத்தில் வலுப்படுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்தேன். கட்சிக்குள் கட்டமைப்பொன்றை உருவாக்கினேன்.

பொதுச்செயலாளர் பதவி என்பது எனக்கு கட்டாயம் அல்ல. அப்பதவியை துறப்பதற்குகூட நான் தயாராகவே இருக்கின்றேன். நாளை வேண்டுமானாலும் இதைச் செய்ய தயார். ஆனால் இரு பக்கங்களிலும் கால்களை வைத்துக் கொண்டு பயணிக்கக்கூடாது. இருந்தால் ஒரு பக்கம் இருக்க வேண்டும். " எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார். (அ)

# மொட்டு கட்சியினர் ஜனாதிபதியுடன் ஆலோசனை

கொழும்பு, மே 31

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் மொட்டுக் கட்சியின் மாவட்டத் தலைவர்கள், முன்னாள் அமைச்சர்கள் ஆகியோர் பங்கேற்றனர் எனவும், அரசின் எதிர்கால நகர்வுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன எனவும் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

தேர்தல் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டுள்ளது.

அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக்கட்சித் தலைவர்கள் சிலரும் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர் எனத் தெரியவருகின்றது.

அமைச்சரவை மறுசீரமைப்பை மேற்கொள்ளும் வகையிலேயே ஜனாதிபதி இந் தச் சந்திப்பை நடத்தியிருந்தார் என தகவல் வெளியாகியுள்ளது.(அ)



# சுதுமலையில் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 31

சுதுமலை சிறி புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் 7ஆம் திருவிழாவை சுதுமலை தெற்கு பகுதி மக்களிடம் வழங்குமாறு கோரி நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யுகசக்தி சனசமூக நிலையத்தில் இருந்து ஆரம்பித்த இந்த போராட்டம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் வரை பேரணியாகச் சென்றது.

அதன் பின்னர் ஆலயத்தின் தலைவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "ஏழாம் திருவிழாவை எம் மக்களுக்கு கொடு, இது தனி குடும்பத்தின் திருவிழா அல்ல ஊர் மக்களின் திருவிழா, திருவிழாவை பறித்து எம் மக்களை ஏமாற்றாதே, ஆலய நிர்வாகமே நீதியான பதில் சொல், கிராமம் ஒன்றுபட எமது திருவிழா எமக்கு வேண்டும்" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

பண்டையகாலம் தொட்டு ஏழாம் திருவிழாவானது சுதுமலை தெற்கு பகுதி மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த திருவிழாவிற்கான நிதியை எமது பகுதி மக்கள் திரட்டி, எமது திருவிழா தலைவரான கந்தையா என்பவரிடம் கொடுப்போம்.

அவர் அந்த நிதியை ஆலய திருவிழாவிற்குச் செலவு செய்வார். திருவிழாவை அனைவரும் சேர்ந்து செய்வோம்.

அவர் கடந்த 1994ஆம் ஆண்டு உயிரிழந்து விட்டார். அதன் பின்னர் அவரது பெண் பிள்ளைகள் வழியில் வந்தவர்கள் எங்களை திருவிழா செய்ய விடாமல், இது தங்களது திருவிழா என்று கூறுகின்றார்கள்.

இந்த பிரச்னை பொலிஸ் நிலையம், மானிப்பாய் பிரதேச சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர்கள் இந்த

பிரச்னையை விசாரித்து விட்டு, திருவிழாவை பொதுவாக செய்யுமாறு கூறினர். ஆலய நிர்வாகத்தினரும், திருவிழாவை அனைவரும் சேர்ந்து செய்யுமாறுதான் கூறுகின்றனர்.

இந்த பிரச்னையை 1994 ஆம் ஆண்டு தமிழ் அமைப்பின் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றவேளை, திருவிழாவினை பொதுவாக செய்யுமாறு அவர்களும் தீர்ப்பளித்தனர்.

கடந்த 23ஆம் திகதி, யுகசக்தி சனசமூக நிலையத்தின் தலைவர் உட்பட ஐவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் குறித்த தரப்பினரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருவிழாவிற்கு இடைக்கால தடை விதிக்குமாறு கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே எமது இந்த பிரச்னைக்கு சரியான தீர்வு கிடைத்து, நாங்கள் அனைவரும் சேர்ந்து இந்த திருவிழாவினை நடத்த வேண்டும் - என்றனர். (அ)

# நன்கு திட்டமிடப்பட்டு பௌத்தம் அவமதிப்பு

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே 31

நாட்டில் பௌத்த மதத்துக்கு எதிரான அவமதிப்புகள் நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படுபவை என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸ தலைமையிலான மேலவை இலங்கை கூட்டணியின் விசேடக் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியால் நாடு கட்டியெழுப்பப்படுமா? அல்லது இன்னும் மோசமான நிலைக்கு செல்லுமா? என்பதுத் தொடர்பான கலந்துரையாடல்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அக்கூட்டணியால் பல கூட்டங்களை நடத்தவும், அதன் முதலாவது கூட்டம் பாணந்துறையில் ஆரம்பிக்கப்படும் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்ல வேண்டுமென நினைத்தால், அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும்.

இடைக்கால ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டி நடத்துவதற்கான அதிகாரங்கள் இல்லை எனவும் அவர் கூறினார். (அ)

# எரிவாயுவுக்கான கேள்வி உயர்வு

கொழும்பு, மே 31

எரிவாயுவுக்கான நாளாந்த கேள்வி அதிகரித்துள்ளமையால், தினசரி எரிவாயு விநியோகம் 10 ஆயிரம் சிலிண்டர்களால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி, தினசரி எரிவாயு விநியோகம் 30 ஆயிரத்தில் இருந்து 40 ஆயிரம் சிலிண்டர்கள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் அதிகாரி மேலும் கூறினார்.

இந்நிலையில், எரிவாயு விநியோகத்தை அதிகரிக்க சப்புகஸ்கந்தை மாபிம பிரதேசத்தில் புதிய எரிவாயு முனையம் ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (அ)

# செங்கோல் முதல் பிரதமர் உரை வரை இடம்பெற்ற தமிழ்: தமிழகத்தை குறி வைத்து நடக்கும் அரசியலா?

க. சுபகுணம்

நாடாளுமன்ற திறப்பு விழாவன்று சுமார் ஒரு மணிநேரம் நடந்த பூஜைக்குப் பிறகு செங்கோல் முன்பாக விழுந்து கும்பிட்ட பிரதமர், புதிய நாடாளுமன்றத்தில் முதல்முறையாக உரையாற்றியபோது, “இங்கு செங்கோல் நிறுவப்பட்டுள்ளது. புனிதமான செங்கோலின் பெருமையை மீட்டெடுக்க முடிந்தது நம் அதிர்ஷ்டம்,” என்று தெரிவித்தார்.

புதிய நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை ஆதீனங்கள் டெல்லியில் பிரதமரை சந்தித்தது, நாடாளுமன்றத்தில் செங்கோல் நிறுவப்பட்டது, பிரதமர் உரை என்று பல்வேறு விதங்களில் தமிழ்நாட்டின் தொடர்பு இருந்து கொண்டே இருந்ததாகவும் இது அரசியல் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் அணுகுமுறை என்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

தெலங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன், “நம் நாடாளுமன்றத்தில் நம் மனதை ஆளும் தமிழ் ஒலித்தபடியே நம் தமிழ் அரசர்கள் பயன்படுத்திய செங்கோல் நிறுவப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று நிகழ்வு தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் வரலாற்றுப் புகழைச் சேர்த்திருக்கிறது. இதைப் புறக்கணித்தவர்கள் தமிழுக்கும் தமிழ் கலாசாரத்திற்கும் துரோகம் செய்து மிகப்பெரிய வரலாற்றுப் பிழையை ஆற்றியுள்ளார்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது,” என்று தெரிவித்தார்.

தமிழிசை சௌந்தர்ராஜன் நாடாளுமன்றத்தில் தமிழின் பெருமை ஒலித்ததாக்க கூறியது குறித்துப் பேசிய மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன், “பிரதமர் தமிழர்களுக்கு அளிக்கும் அதிக முக்கியத்துவத்தை இம்மாதிரியான உயிரற்ற பொருட்களில் கொடுப்பதைவிட, தமிழ் மக்களுடைய உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்,” என்று கூறினார்.



ஆனால், பிரதமரின் இந்த அணுகுமுறை கட்டாயம் அரசியல் உள்நோக்கம் கொண்டதுதான் என்று கூறும் மூத்த பத்திரிகையாளர் பத்ரி சேஷாத்ரி, “தன்னை வெறுப்பவர்கள் இருப்பதற்காக தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரையும் அதற்காக நான் ஒதுக்கிவிட மாட்டேன் என்பதை உணர்த்துவதற்காகவே பிரதமர் தொடர்ந்து தமிழர் பெருமைகளைப் பேசுவதையும் தமிழர் அடையாளங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் செயல்களையும் செய்கிறார்,” என்று கூறுகிறார்.

### புதிய நாடாளுமன்றத்தில் பிரதமர் என்ன பேசினார்

பிரதமர் புதிய நாடாளுமன்றத்தில் ஆற்றிய முழு உரையில், “ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிப் பயணத்திலும் சில தருணங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக மாறும். மே 28 அத்தகைய ஒரு நாள் தான்.

“இது வெறும் கட்டடம் இல்லை, 140 கோடி இந்திய மக்களுடைய லட்சியத்தின் சின்னம். இது இந்தியாவின் உறுதியைப் பற்றிய செய்தியை உலகுக்கு வழங்குகிறது,” என்று கூறினார்.

மேலும், “இந்தப் புதிய நாடாளுமன்றம் தன்னிறைவு பெற்ற இந்தியாவின் எழுச்சிக்குச் சாட்சியாக விளங்கும். செங்கோல் இங்கு நிறுவப்பட்டிருக்கிறது. இந்தச் செங்கோல் சோழ வம்சத்தில் நீதி மற்றும் நல்லாட்சியின் அடையாளமாக இருந்தது.

இப்படிப்பட்ட புனிதமான செங்கோலின் பெருமையை மீட்டெடுக்க முடிந்தது நம்முடைய அதிர்ஷ்டம். இனி அவை தொடங்கும்போதெல்லாம் இந்தச் செங்கோல் நம்மை ஊக்குவிக்கும். இந்தியா முன்னேறும்போது, உலகமும் முன்னேறும். இந்தியாவினுடைய வளர்ச்சியின் மூலம் உலகின் வளர்ச்சிக்கும் இந்தப் புதிய நாடாளுமன்றம் வழிவகுக்கும்,” என்று பேசினார்.

### “இந்தியா ஜனநாயகத்தின் தாய்”

அதோடு, “இந்தியா ஒரு ஜனநாயக நாடு மட்டுமல்லாது ஜனநாயகத்தின் தாயும்கூட. அடிமைத்தனத்துக்குப் பிறகு பலவற்றை இழந்து புதிய பயணத்தைத் தொடங்கிய நம் இந்தியா, பயணத்தில் பல ஏற்றத் தாழ்வுகளைக் கடந்து, சவால்களைக் கடந்து சுதந்திரத்தின் பொற்காலத்தில் நுழைந்திருக்கிறது.

பல ஆண்டுக்கால அந்நிய ஆட்சி நம் பெருமைகளை நம்மிடமிருந்து பறித்தது. இன்றைக்கு இந்தியா அந்தக் காலனித்துவ மனநிலையை விட்டுச் சென்றுவிட்டது. இந்தப் புதிய நாடாளுமன்றம், பழைமையும், புதுமையும் ஒன்றாக இருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.



புதிய நாடாளுமன்றம் கட்டப்பட்டதன் மூலம் 60,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்தது. அவர்களுக்கென டிஜிட்டல் கேலரி கட்டப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அதனால்தான் புதிய நாடாளுமன்றம் கட்டுவது காலத்தின் தேவையாக அமைந்திருக்கிறது. இன்று, புதிய இந்தியா புதிய இலக்குகளை நிர்ணயித்திருக்கிறது.

புதிய பாதைகளை விரும்புகிறது. அதன் உற்சாகம் புதியது, பயணம் புதியது, யோசனை புதியது, திசை புதியது, பார்வை புதியது. எனவே, இந்த 25 ஆண்டுகளில் நாம் அனைவரும் இணைந்து இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும்.

இன்று, இந்தப் புதிய நாடாளுமன்றத்தை நிர்மாணித்ததற்காக நாம் பெருமிதம் கொள்கிறோம். இங்கு இயற்றப்படும் சட்டங்கள் வறுமையை அகற்ற உதவும்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் நாட்டில் நான்கு கோடி ஏழைகளுக்கு வீடுகள் மற்றும் 11 கோடி கழிவறைகள் கட்டப்பட்டதை நினைக்கும்போது அது எனக்கு அளவற்ற திருப்தியைத் தருகிறது. நாட்டிலுள்ள கிராமங்களை இணைக்க 4 லட்சம் கி.மீ சாலைகளை அமைத்திருக்கிறோம்,” என்று கூறினார்.

### “தமிழ் மக்களின் உரிமைகள்தான் முக்கியம்”

“செங்கோலுக்கு அங்கீகாரம், தமிழ்நாட்டிற்கு மரியாதை போன்றவையெல்லாம் உயிரற்ற பொருட்கள். அந்த உயிரற்ற பொருட்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை, தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளுக்குக் கொடுக்கலாமே!” என்கிறார் மூத்த செய்தியாளர் குபேந்திரன்.

“இங்கு வாழும் உயிருள்ள மக்களுக்கு என்ன தேவை, அவர்கள் பேசும் மொழிக்கு என்ன தேவை என்பதைச் செய்தால் அது காலத்திற்கும் பேசப்படும்.

நீதி, நெறி தவறாமல் ஆட்சி புரிவதுதான் செங்கோன்மை. அதன் வழியில் வந்ததுதான் செங்கோல். அந்த வகையில் ஆட்சி செய்வதில்தான் பெருமை உள்ளது. அதை அங்கு நட்டு வைத்துவிட்டு, ஆட்சி செய்வதால் மட்டுமே பெருமை வந்துவிடாது.

“தமிழிசை சௌந்தர்ராஜனோ, மத குருமார்களோ, ஆதீனங்களோ யார் வேண்டுமானாலும் இதைப் பெருமையாகச் சொல்லலாம். ஆனால், தமிழ் மக்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் செய்த நன்மைகள் என்ன?” என்று கேள்வியெழுப்புகிறார்.

மேலும், “சிறு சான்றாக மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையைச் சொல்லலாம். அதற்குப் பிறகு அடிக்கல் நாட்டப்பட்டு பல மருத்துவக் கல்லூரிகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. ஆனால், இன்னமும் ஏன் மதுரை எய்ம்ஸ் முடிக்கப்படாமலே இருக்கிறது?

இதைச் செய்யாமல், ஆதீனம் கொடுத்த செங்கோலை பக்கத்தில் வைத்துக் கொள்வதால் எந்த நன்மையும் வந்துவிடாது.



இப்படியெல்லாம் செய்து சமூக ஊடகங்களைப் பேச வைப்பதால் எந்தப் பயனும் இல்லை. மாநிலம் பயனுறச் செய்வதுதான் ஓர் ஆட்சியாளருக்கு அழகு,” என்கிறார் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன்.

### “பிரதமர் செய்வது அரசியல்தான்”

தமிழ் மொழிக்கும் அதன் பாரம்பரியத்திற்கும் நாடாளுமன்றத்தில் கொடுக்கப்பட்ட பங்களிப்பு குறித்துப் பேசிய மூத்த பத்திரிகையாளர் பத்ரி சேஷாத்ரி, “பிரதமர் நிச்சயமாக இதில் அரசியல்தான் செய்வதாக” கூறினார்.



“தமிழ்நாட்டில் உள்ள தமிழ் பிரிவினைவாதிகளான திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் தேசியவாதிகள் ஆகியோர் என்ன கேட்கிறார்கள்?

நீட் தேர்விலிருந்து விலக்கு வேண்டும், மற்றவர்களுக்கு என்ன கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றிக் கவலையில்லை எங்களுக்கு அதிக நிதி வேண்டும் என்று சிலவற்றைத் தமிழர் நலன் என்று ஒரு தோற்றத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றோடு கூடுதலாக தமிழர்களை வஞ்சிக்கிறீர்கள் எனச் சொல்வார்கள்.

ஆனால், “தமிழ்நாட்டைக் கீழே தள்ளி இன்னொரு மாநிலத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பே கிடையாது. அப்படியொரு தனி ஃபார்முலாவை யாரும் தீட்டவில்லை. அப்படி இருந்தால் பாஜகவால் இங்கு வெல்ல முடியாது என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்,” என்று கூறியவர், புதிய நாடாளுமன்ற திறப்பின்போது செய்யப்பட்டது கட்டாயம் அரசியல்தான் என்கிறார்.

“தமிழர்கள் தங்களை நம்ப வேண்டும் என்பதுதான் அந்த அரசியல். அதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அதையெல்லாம் செய்கிறார். ‘கோ பேக் மோடி” எனச் சொன்னாலும்கூட, ஒரு சிலர் வெறுப்புப் பேச்சைப் பேசுகிறார்கள் என்பதற்காக மொத்த மக்களையும் உதறிவிட்டுப் போக முடியாது அல்லவா!

ஆகையால், திருவள்ளுவர் கூறுவது போல் “அவர் நாண நல் நயம் செய்துவிடல” என்ற அணுகுமுறையைத்தான் பிரதமர் கொண்டுள்ளார்,” என்று கூறுகிறார் பத்ரி சேஷாத்ரி.

“மக்களுக்குத் தன்மீது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும், தான் அவர்களுக்காக நிற்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக பிரதமர் தனிப்பட்ட முறையில் முயல்கிறார்.

ஒரு கலாசார தொடர்பை உருவாக்க முயல்கிறார்கள். இங்கு இருப்பவர்கள் பிரிவினையை ஆயுதமாகப் பயன்படுத்தினால், இணைத்துக்கொள்வதை பாஜக ஆயுதமாகப் பயன்படுத்துகிறது. இதில் எது நிற்கப் போகிறது என்பதை அடுத்த சில ஆண்டுகளில்தான் பார்க்க வேண்டும்,” என்றும் தெரிவித்தார் மூத்த பத்திரிகையாளர் பத்ரி சேஷாத்ரி.

# ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு பாராளுமன்றத்தின் முழுமையான ஆதரவு தேவை



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் ஒன்றரை வருடங் களுக்கும் குறைவான காலமே இருக்கும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காக கொண்டிருக்கும் அபிலாசைகளை நிறைவேற்றுவதானால் அதற்கு இறுக்கமான ஒரு கால எல்லையே உள்ளது. கடந்த வாரம் அவர் ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயம் மிகவும் வெற்றிகரமானதாக அமைந்ததாக கூறப்படுகிறது. பல தசாப்தங்களாக இலங்கையின் மிகப்பெரிய உதவி வழங்குநராக விளங்கிய அந்த நாட்டுடனான உறவுகளை புதுப்பிப்பதில் ஜனாதிபதி அக்கறை காட்டினார். ஜப்பானின் உதவியுடன் முன்னெடுக்கப்படவிருந்த இலகு ரயில் திட்டம் ரத்துச் செய்யப்பட்டதற்காக ஜப்பானிய தலைவர்களிடம் ஜனாதிபதி மன்னிப்புக் கோரினார். இலங்கை ரத்துச் செய்ததை அடுத்து அந்த திட்டத்தை ஜப்பான் பங்களாதேசுக்கு வழங்கியது.

இலகு ரயில் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் கொழும்பின் வாகன நெரிசல் கணிசமானளவுக்கு குறைக்கப்பட்டிருக்கும். அந்த திட்டத்தை எந்தவிதமான நியாயமான காரணமும் இல்லாமல் நாகரிகமற்ற முறையில் ஒருதலைப்பட்சமாக ரத்துச் செய்த முன்னைய அரசாங்கத்தின் மோசமான தவறு காரணமாக இலங்கை ஜப்பானின் நல்லெண்ணத்தை இழந்தது. அதை மீட்டெடுப்பது இலகுவானதாக இருக்கப் போவதில்லை. ஜப்பானை இலங்கைக்கு உதவி வழங்கும் பங்காளராக மீண்டும் பெறுவது ஒரு பெரிய நற்பேறாக அமையும். நாட்டையும் மக்களையும் பாதிக்கும் பாரதூரமான பொருளாதார நெருக்கடியில் இருந்து காலவரையறையின்றி ஒரு நீண்ட காலத்துக்கு அல்லாமல் குறுகிய காலத்திற்குள் மீள்வதாக இருந்தால் பெருமளவு வெளிநாட்டு உதவிகள் வந்து குவியவேண்டும்.

வருவாய்ப் பெருக்கம் மற்றும் செலவினக் குறைப்பு தொடர்பில் நாடு முன்னெடுத்திருக்கும் கட்டமைப்பு ரீதியான பொருளாதார சீர்திருத்தங்களுக்காக ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் பெரிதும் பாராட்டப்படுகிறது. பொருளாதாரத்தை ஒழுங்கமைப்பதற்கு சீர்திருத்தங்களை முன்னெடுப்பது என்பது ஜனாதிபதியின் ஒரு நீண்டகால அடிப்படையிலான விருப்பமாக இருந்துவந்துள்ளது. முன்னர் பிரதமராக பதவி வகித்த காலப்பகுதிகளிலும் அந்த விருப்பத்தை வெளிக்காட்டி அவர் செயற்பட்டார். 2001 - 2004 காலப்பகுதியில் பிரதமராக அவர் அரசாங்கத்தை வழிநடத்தியபோது விடுதலை புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டு இதே போன்ற பொருளாதாரச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த முயற்சித்தார்.

அந்த இரு முற்போக்கான நடவடிக்கைகளையும் சனத்தொகையினால் ஏற்றுக்கொள்ள முடியாமல்போன துரதிர்ஷ்டவசம் காரணமாக அடுத்து வந்த தேர்தலில் விக்கிரமசிங்க தோல்வியைத் தழுவினார். மனம் சளைக்காமல் அவர் மீண்டும் மானியங்கள் குறைப்பு, வரிகள் அதிகரிப்பு மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை தனியார்மயப்படுத்தல் போன்ற பலரால் விரும்பப்படாத பிரபல்யமில்லாத பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சவாலை ஏற்றிருக்கிறார்.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவித்திட்டத்தின் ஒரு பகுதியாக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் ஊழல் தடுப்பு சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருகிறது. அத்தகைய சட்டமூலத்தைக் கொண்டுவருமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்தை கேட்டுக்கொண்டது. இன்னமும் வரைவு வடிவில் இருக்கும் இந்த சட்டமூலத்தை கொண்டுவருவதில் அரசாங்கத்தையும் விட ஜனாதிபதியே கூடுதல் அக்கறை காட்டிச் செயற்படுவதாக தெரிகிறது. ஊழலுக்கு எதிரான “ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நாஷனல்” அமைப்பின் தலைமையில் சிவில் சமூகக் குழுவொன்று பாராளுமன்ற கட்டிடத்தொகுதயில் சகல கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக நடத்திய கூட்டமொன்றில் இதைக் காணக்கூடியதாக இருந்தது.

எதிரணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த கூட்டத்தில் பெருமளவில் பங்கேற்ற அதேவேளை அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைவான எண்ணிக்கையிலேயே கலந்துகொண்டனர். எதிரணி கட்சிகளின் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் உயர்மட்ட தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் பிரசன்னமாயிருந்தார். ஊழலுக்கு எதிரான போராட்டத்துக்கு ஒரு நேர்மறையான ஊக்குவிப்பாக ஊழல் தடுப்பு சட்டமூலம் அமைகிறது என்ற கருத்தொருமிப்பை அந்த கலந்துரையாடலில் காணமுடிந்தது.

**களநிலைவரம்**

நல்லாட்சி மற்றும் பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய சட்டங்களின் நடைமுறைப்படுத்தலைப் பொறுத்தவரை களநிலைவரம் தொடர்ந்தும் மிகவும் திருப்தியற்றதாகவே இருந்து வருகிறது. கடந்த வருடத்தைய போராட்ட இயக்கம் ஊழல் மற்றும் தவறான பொருளாதார முகாமைத்துவம் ஆகியவற்றின் மீதே குறிப்பான கவனத்தைச் செலுத்தியிருந்தது. அந்த இரு அம்சங்களுமே முழு சனத்தொகையையும் பாதித்த பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்தன என்பதே அதற்கு காரணமாகும்.

> **ஊழலுக்கு முடிவுகட்டவேண்டும் என்றும் அதிகாரதுஷ்பிரயோகங்களைச் செய்தவரகளை பொறுப்புக் கூறவைக்கவேண்டும் என்றும் கோரிநின்ற போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதற்கு மாத்திரமே இதுவரையில் ஜனாதிபதியினால் படைகளையும் பாராளுமன்ற பெரும்பான்மையையும் பயன்படுத்தக்கூடியதாக இருந்திருக்கிறது.**

நிறைவேற்று அதிகார பீடத்திடம் குவிந்திருந்த அதிகாரம் ஊழலுக்கும் தவறான பொருளாதார முகாமைத்துவத்துக்கும் அனுசரணையாக இருந்தது. அதிகாரங்கள் முறையாக செயற்படுத்தப்படுவதற்கு தேவையான தடுப்பு மற்றும் சமப்படுத்தல் பொறிமுறைகளை உறுதிப்படுத்துவதற்கு முக்கியமான அரச நிறுவனங்களின் சுயாதீனத்தை மீளவும் நிலைநிறுத்தும் நோக்கில் அரசியலமைப்புக்கான 21 வது திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேறச் செய்தமை ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அரசியல் விவேகமிகு செயற்பாடுகளில் ஒன்றாகும். மேற்பார்வை அமைப்புக்களுக்கு பொறுப்பாக இருப்பவர்களை அரசியல் அதிகாரத்தின் தலையீட்டில் இருந்து பாதுகாப்பது 21 வது திருத்தத்தின் மிகவும் முக்கியமான அம்சமாகும்.

எதிர்காலத்தில் நல்லாட்சிக்கும் பொறுப்புக்கூறலுக்குமான கட்டமைப்புக்களை ஏற்படுத்தும் விடயத்தில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் வழிகாட்டலை பின்பற்றுவதற்கு பாராளுமன்றத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் விருப்பத்தை வெளிக்காட்டியிருப்பது தற்போதைய தருணத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். ஆனால் அவற்றின் நடைமுறைப்படுத்தும் விடயத்தில் குறிப்பாக ஆளும் கட்சி தன்னைப் பாதுகாப்பதற்கு சொந்த நலன்களின் அடிப்படையிலேயே செயற்படுகிறது. துரதிர்ஷ்டவசமாக ஆளும் கட்சி தலைமையிலான பாராளுமன்றப் பெரும்பான்மை சட்டம் மற்றும் நல்லாட்சி நடைமுறைகளை மீறும் வகையில் நடந்துகொள்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பொதுப்பயன்பாட்டு வசதிகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றினால் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விதம் இதற்கு ஒரு உதாரணமாகும். வறியவர்களின் மின்சாரக் கட்டணத்தை 500 சதவீதத்தாலும் மிகவும் வசதி படைத்தவர்களினதும் கம்பனிகளினதும் மின்கட்டணத்தை வெறுமனே 50 சதவீதத்தாலும் அதிகரித்த தீர்மானத்தை எதிர்த்த ஆணைக்குழுவின் தலைவரை 21 வது திருத்தத்தின் ஏற்பாடுகளில் உள்ளை உத்தரவாதங்களினால் காப்பாற்றமுடியாமல் போனது கவலைக்குரியது.

அதே வாரத்தில் இன்னொரு சம்பவம். வெளிநாட்டில் இருந்து தங்கத்தைக் கடத்திக்கொண்டு வந்தபோது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிடிபட்டார். சட்டத்தின் பிரகாரம் அத்தகைய குற்றங்களுக்காக விதிக்கப்படுகின்ற அபராதத் தொகையையும் விட மிகவும் குறைவான அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார். தனது செயலுக்காக அந்த பாராளுமன்ற உறுப்பினர் வருந்துவதாகவும் இல்லை. மாறாக தனது பெட்டியில் பொருட்களை வைத்து நிரப்பும் பணியை தான் செய்யவில்லை, வேறு ஒருவரே செய்ததாக கூறுகின்ற அளவுக்கு அவர் தைரியத்தைக் கொண்டிருந்தார். அநீதியான நடவடிக்கைக்கு தான் பலியாகிவிட்டதாகவும் கூட அவர் புலம்பினார்.

அபராதத் தொகையை செலுத்திய பிறகு சுங்கத் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட அதே தினமே அவர் எந்த பிரச்சினையுமே இல்லை என்பது போன்று பாராளுமன்றத்துக்கு சென்றார். தங்கம் கடத்தி பிடிபட்ட அவர் பதவி விலகவேண்டும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் அவர் பதவிவிலகவில்லை. தனக்கும் தனது கட்சிக்கும் பாராளுமன்றத்துக்கும் நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியதற்காக அவர் பொறுப்புக்கூற வைக்கப்படுவாரா அல்லது தனது பாராளுமன்ற சகாக்கள் பலரையும் விட அவர் ஒன்றும் மோசமானவர் இல்லை என்று விவகாரம் அப்படியே கைவிடப்படுமா என்பதே எழுகின்ற கேள்வியாகும்.

**பாராளுமன்ற கலைப்பு**

அதே வாரம் மூன்றாவது சம்பவத்தில் போலிக் கடவுச்சீட்டுடன் நாட்டுக்குள் பிரவேசித்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் குடிவரவு திணைக்கள அதிகாரிகளிடம் விமானநிலையத்தில் பிடிபட்டார். இலங்கையில் முதலீடு செய்யவந்த ஒரு வர்த்தகர் என்ற அடிப்படையில் அவரை விடுதலை செய்யுமாறு அரசாங்க அமைச்சர் ஒருவர் அதிகாரிகளை அறிவுறுத்தினார். ஆனால் ஊடகங்களில் இந்த சம்பவம் தொடர்பான செய்திகள் வெளியானதும் அந்த வெளிநாட்டுப் பிரஜையை நாடு கடத்த தீர்மானித்த அரசாங்கம் அவரை விடுவித்ததில் சட்டவிரோத உத்தரவை பின்பற்றியதற்காக குடிவரவு திணைக்கள அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியது.

அந்த வெளிநாட்டு பிரஜையை விடுவிக்குமாறு குடிவரவு திணைக்கள அதிகாரிகள் மீது செல்வாக்கைப் பிரயோகித்த அமைச்சருக்கு எதிராக எந்த விசாரணையும் நடத்தப்படப்போவதில்லை. ஏனென்றால் அவ்வாறு ஒருவரை விடுவிக்குமாறு எவரும் வேண்டுகோளொன்றை விடுக்கலாம். தவறான அறிவுறுத்தலுக்கு பணிந்தமைக்காக குடிவரவு திணைக்கள அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கேட்டுக்கொண்டபோது பிரதமர் பதவியை பொறுப்பேற்ற ஜனாதிபதி விக்கிரமசிங்க நாட்டை படுகுழியில் இருந்து மீட்டெடுக்கும் சவாலை ஏற்பதற்கு முன்வந்ததற்காக அவருக்கு பாராட்டுக்கள் குவிந்தன. எதிர்காலத்துக்காக சட்டங்களையும் கட்டமைப்புக்களையும் வகுக்க அவர் உறுதிபூண்டிருக்கிறார் என்பது இப்போது தெளிவாக தெரிகிறது.

நல்லாட்சி நடைமுறைகள் மற்றும் பொறுப்புக்கூறலை பின்பற்றுவதற்கு பாராளுமன்ற பெரும்பான்மை தயாரில்லாத ஒரு பின்புலத்தில் அவற்றை நடைமுறைப்படுத்துவது என்பது சாத்தியமானதல்ல என்று தெரிகிறது. அதன் விளைவாக, விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றபோது எதிர்பார்க்கப்பட்ட ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிரான நடவடிக்கைகளை களத்தில் காணமுடியவில்லை.

நாட்டின் எதிர்காலத்துக்காக ஜனாதிபதி விக்கிரமசிங்க வகுக்கின்ற சட்டங்களையும் கட்டமைப்புக்களையும் அவரது அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டே மீறுகிறவர்களுக்கு எதிராக அவர் நடவடிக்கை எடுக்க விரும்புகிறார் அல்லது நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும் என்பதற்கு இன்னமும் சான்றுகளைக் காணவில்லை. ஊழலுக்கு முடிவைக்கட்ட வேண்டும் என்றும் அதிகார துஷ்பிரயோகங்களைச் செய்தவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்படவேண்டும் என்றும் கோரி நின்ற போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதற்கு மாத்திரமே பாதுகாப்பு படைகளையும் பாராளுமன்றப் பெரும்பான்மையையும் இதுவரையில் ஜனாதிபதியினால் பயன்படுத்தக்கூடியதாக இருந்திருக்கிறது.

இத்தகைய நிலை தொடருமானால் ஜனாதிபதி நம்பகத்தன்மையையும் அதிகாரத்தையும் இழக்கவேண்டிவரும் என்கிற அதேவேளை ஊழலிலும் அதிகார துஷ்பிரயோகங்களிலும் ஈடுபட்டவர்கள் மீண்டும் தங்களை வலுப்படுத்திக்கொள்வார்கள். அவர்களை அகற்றுவது சாத்தியமில்லாமல் போகும். இது தேசிய நலன்களுக்கு ஆபத்தானது. நாட்டின் வளங்கள் தனிப்பட்டவர்களின் கைகளுக்கு போகாமல் பொது நன்மைக்கு பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யக்கூடியதாக கடந்த கால போக்குகளில் இருந்து விடுபடுவதற்கு அரசியல் சமுதாயம் அதாவது அரசாங்கத்திலும் எதிரணியிலும் உள்ளவர்கள் சகலரும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கரங்களை வலுப்படுத்தவேண்டியது அவசியமாகும். ●

# ஜெரோம், நடாஷாவின் பின்னணியில் அரசியல் நிகழ்ச்சி நிரல் இருக்கிறதா?

## ஐக்கிய மக்கள் சக்திக்கும் சந்தேகம்

கொழும்பு, மே 31

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் கருத்துகளை வெளியிட்ட ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் நடாஷா ஆகியோரின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் பின்புலத்தில் அரசியல் நிகழச்சி நிரல் காணப்படுகின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

நாட்டில் மீண்டும் இன மற்றும் மத நல்லிணக்கத்தைப் பற்றி பேச வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட போது இவை உயர் மட்டத்தில் காணப்பட்டன. எவ்வித பேதமும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்ததனாலேயே அவரை பதவி விலகச் செய்ய முடிந்தது.

அந்த நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலேயே தற்போது சில குழுக்கள் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மதங்களை நிந்திக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுபவர்களின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான கருத்துக்களை வெளியிடுபவர்களிடம் நிகழ்ச்சி நிரலொன்று காணப்படுகிறது. அந்த நிகழ்ச்சி நிரல்கள் அரசியலை நோக்கமாகக் கொண்டவையாகும். மீண்டும் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுகிறது.

சமூகத்தில் அமைதியை சீர்குலைக்கும் வகையில் செயல்படும் இவ்வாறான நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். 2019ஐ போன்று அழிவு ஏற்பட இடமளிக்காது அரசாங்கம் துரிதமாக செயல்பட வேண்டும். சர்வமதத் தலைவர்கள் , பாராளுமன்றம் மற்றும மக்களுக்கு இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும். உண்மையில் இதன் பின்னணி என்பது தொடர்பில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாமும் தேடிக் கொண்டிருக்கின்றோம் - என்றார். (ஐ)

## கிழக்கு பெருநகர அபிவிருத்தி திட்டம்:

# புல்மோட்டை கைத்தொழில் நகரம் மூதூர் பசுமை சக்தி நகரமாக மாறும்

கொழும்பு, மே 31

கிழக்குப் பெருநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி மற்றும் நிலாவெளி பகுதிகள் கடல் மற்றும் சூழல் சுற்றுலா வலயங்களாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தின் வெருகல் மற்றும் பாசிக்குடா பகுதிகள் மீன்பிடி மற்றும் சுற்றுலா வலயங்களாகவும், அம்பாறை மாவட்டத்தில் கோமாரி முதல் பாணமை வரையான பகுதிகள் கடலோர சுற்றுச் சூழல் சுற்றுலா வலயங்களாகவும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. அத்துடன், கிண்ணியா மீன்பிடி கைத்தொழில் நகரமாகவும், புல்மோட்டை நகரம் கனிம கைத்தொழில் நகரமாகவும், மூதூர் நகரம் பசுமை சக்தி நகரமாகவும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

கடந்த திங்கட்கிழமை கிழக்கு பெருநகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக நடந்த விசேட கலந்துரையாடலிலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன.

மேலும், கிழக்கு பெருநகர அபிவிருத்தி திட்டத்தைத் தயாரிக்கும் போது சுற்றுலா, மீன்பிடி, கைத்தொழில் மற்றும் முதலீடு ஆகிய துறைகளில் அதிக கவனம் செலுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கிழக்கு பெருநகர அபிவிருத்தித் திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய அமைச்சர், அதன் இறுதி மதிப்பாய்வுப் பணிகளை ஜூன் மாதம் ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் கிழக்கு பெருநகர அபிவிருத்தி திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன்படி, இது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த கலந்துரையாடலை நடத்தினார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசனையின் பேரில் சிங்கப்பூரின் நகர வடிவமைப்பு நிறுவனம் கிழக்குப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்து வருகிறது. முதல்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கே இந்தத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதன் கீழ் இந்த மாவட்டங்கள் பொருளாதார, வர்த்தக, கலாசார மற்றும் சுற்றாடல் ரீதியாக அபிவிருத்தி செய்யப்படும்.

இங்கு, நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும், எனவே தற்போதைய பொருளாதார நிலைமைக்கு ஏற்ப இந்த அபிவிருத்தித் திட்டம் வடிவமைக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார். அதன் மீளாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு, பின்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்த அபிவிருத்தித் திட்டத்தை வர்த்தமானி மூலம் வெளியிடும்.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் நகர அபிவிருத்தி அதிகாரசபையானது, நகர அபிவிருத்தி பிரதேசமாக அறிவிக்கப்படும் எந்தவொரு பிரதேசத்திற்கும் நகர அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்தக் கடமைப்பட்டுள்ளது. இது 1978/41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் உள்ளது. (ஐ)






# தோப்பூரில் இலங்கை வங்கியில் ஏ.ரி.எம் இயந்திரம் அவசியமானது

## இலங்கை வங்கித் தலைவரிடம் எம்.எஸ்.தௌபீக் எம்.பி வலியுறுத்து



திருமலை, மே 31

தோப்பூர் இலங்கை வங்கிக் கிளையில் ஏ.ரி.எம் இயந்திரம் நிறுவுவது தொடர்பாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் மற்றும் இலங்கை வங்கித் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் சி. பெரேரா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இலங்கை வங்கித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அவசர தேவையின்போது ஏ.ரி.எம் இயந்திரத்தில் பணம் பெறுவதற்கு சுமார் 15 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள மூதூர் நகருக்கு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக பிரதேச மக்களால் ஏ.ரி.எம் இயந்திரம் ஒன்றை நிறுவுமாறு கோரி கையொப்பம் இடப்பட்ட கோரிக்கைக் கடிதம் இலங்கை வங்கிக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாகவே இச்சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது தோப்பூர் இலங்கை வங்கி கிளையில் ஏ.ரி.எம் இயந்திரம் பொருத்துவதற்கு விரைவில் நடவடிக்கையை மேற்கொள்வதாக இலங்கை வங்கியின் தலைவர் தெரிவித்தார்.

(அ)

# காரைதீவு கண்ணகை அம்மனின் வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு



காரைதீவு, மே 31

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கடல் நீர் எடுத்து, கல்யாண கால் முறித்து நடுதலுடன் ஆரம்பமானது.

முன்னதாக ஆலயத்தில் தர்மகத்தாக்கள், கப்புகனார்கள், நிர்வாகிகள் சேர்ந்து விசேட பூசை வழிபாடு இடம் பெற்று, பாரம்பரிய மரபு முறைப்படி பறை மேளம் அடித்து கடற்கரைக்கு சென்று அங்கு விசேட பூசை இடம் பெற்று கடல்தீர்த்தம் எடுக்கப்பட்டது.

அங்கிருந்து நேராக வீதி முழுவதும் நடைபாவாடை விரிக்கப்பட்டு, கல்யாண கால் (பூவரசு மரக்கிளை) முறித்து எடுக்கப்பட்டு, பக்தர்களால் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டது.

ஆலயத்தில் அதற்கான சடங்குகளை செய்து உரிய வேளையிலே குரவை ஒலிக்கு மத்தியில் கல்யாணக்கால் சிறப்பாக நடப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் கூறைச் சேலைகளை அம்மனின் கல்யாண காலுக்கு சாத்தி வழிபட்டார்கள்.

(அ)

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு வளத்தாப்பிட்டியில்



காரைதீவு, மே 31

சம்மாந்துறை வலயத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய புதிய வளத்தாப்பிட்டி நாவலர் வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதிபர் கே கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

சம்மாந்துறை நஜா பவுண்டேஷன் அமைப்பினரால் வழங்கப்பட்ட இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக கல்வி பணிப்பாளர் உமர் மௌலானா கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, பவுண்டேஷன் சார்பில் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் ஐநூல் ஜாரியா நபீர் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக ஆசிரிய ஆலோசகர் இசட் எம். றிஸ்வி கலந்து சிறப்பித்தார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் உதாரணங்கள் வழங்கப்பட்டன.

(அ)

# மட்டக்களப்பு நகருக்குள் டெங்கு நுளம்பு அபாயம்



மட்டக்களப்பு, மே 31

மட்டக்களப்பு நகரில் குடிமனைகளை ஊடறுத்துச் செல்லும் வடிகான்களில் புதர்கள் வளர்ந்து கழுவு நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதால், டெங்கு நுளம்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, தமது வீடுகளில் தேங்காய் சிரட்டை மற்றும் ரின்களை தேடுவதை சுகாதார அதிகாரிகள் விட்டுவிட்டு, இந்த வடிகானில் நீர் தேங்கி நிற்பது தொடர்பாக மாநகர சபைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு நகரில் ஆசிரியர் கலாசாலைக்கு அருகில் இருந்து ஆரம்பிக்கும் இந்த பெரிய வடிகான், 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடிமனைகளை ஊடறுத்து, பொற் தொழிலாளர் வீதி ஊடாக கல்லடி வாவியைச் சென்றடையும் சுமார் ஒரு கிலோமீற்றருக்க அதிகமான தூரத்தைக் கொண்டுள்ளது.

வடிகானில் மரங்கள் வளர்ந்துள்ளதுடன், கழிவுப் பொருட்கள் குவிந்துள்ளதால் கழிவு நீர் வழிந்தேட முடியாமல் தேங்கி நிற்கின்றது.

இதனால் டெங்கு நுளம்பு மற்றும் விசப் பாம்புகள் வடிகானுக்கு அருகிலுள்ள வீடுகளுக்குள் நுழைவதுடன் டெங்கு ஏற்படக்கூடிய நிலையும் தோன்றியுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் டெங்கு நுளம்பை ஒழிப்பதாக தமது வீடுகளுக்கு வரும் பொதுச் சுகாதார அதிகாரிகள், இந்த வடிகானில் டெங்கு நுளம்பு வளர்க்கும் மாநகர சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பார்களா என பொது மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

(அ)

# மின்னல் தாக்கி ஒருவர் பலி!

திருமலை, மே 31

மின்னல் தாக்கியதில் கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக கந்தளாய் வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர். உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அக்போபுர-படுகச்சிய பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையை முகம்மது லத்தீப் முஹம்மது மபாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(அ)

# காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வளாகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

காரைதீவு, மே 31

டெங்கு ஒழிப்பு சிரமதானம் காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வளாகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

காரைதீவு முதலாம் ஆறாம் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் சேர்ந்து அப்பகுதி கிராம சபை உத்தியோகத்தர்களான செல்லத்துரை கஜேந்திரன் திருமதி சிறிகாந்தன் தலைமையில் சிரமதானத்தை மேற்கொண்டார்கள்.

காரைதீவு பொலிஸாரும் இணைந்து கொண்டனர்.



வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு ஆரம்பமாகி இருப்பதால் பக்தர்களின் நலன் கருதி ஆலய வளாகத்தில் இச் சிரமதானம் இடம்பெற்றது.

(அ)

# உக்ரைன் தலைநகர் மீதான ரஷ்யாவின் கொடூரத் தாக்குதலுக்கு பதிலடி உறுதி!

## அந்நாட்டு இராணுவ உளவுத்துறை எச்சரிக்கை

*கீவ், மே 31*

உக்ரைன் தலைநகர் மீதான ரஷ்யாவின் கொடூர தாக்குதலுக்கு பதிலடி உறுதி என உக்ரைன் ராணுவ உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த திங்களன்று முன்னெடுக்கப்பட்ட ரஷ்யாவின் கண்மூடித்தனமான தாக்குதல் ஒருவகையில் தோல்வி தான் என உக்ரைன் தளபதி புட்டனோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஏவுகணைகளை தங்களால் முறியடிக்க முடிந்தது என குறிப்பிட்டுள்ள அவர், இதுவரை உயிரிழப்பு தொடர்பில் தகவல் ஏதும் வெளிவரவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், ஏவுகணை எச்சங்களால் குடியிருப்பு பகுதிகளில் தீவிபத்து ஏற்பட்டது என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து இரு இரவுகள் கடுமையான ட்ரோன் தாக்குதலை முன்னெடுத்த ரஷ்யா, கடந்த திங்களன்று திடீரென்று கண்மூடித்தனமாக ஏவுகணை தாக்குதலை தொடுத்தது.

இந்த மாதத்தில் மட்டும் உக்ரைன் தலைநகர் மீது ரஷ்யா 16 வான் தாக்குதலை முன்னெடுத்துள்ளது.

மேலும் நகர மையத்தை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மே மாதத்தில் இதுவரை உக்ரைன் தலைநகர் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் அனைத்தும், இரவு நேரங்களில் நடந்துள்ளன.

இந்த தாக்குதலுக்கு பின்னர் தளபதி புட்டனோவ் தெரிவிக்கையில்- ரஷ்யாவுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் காத்திருக்கிறது. கீவ் மக்களை ரஷ்ய நிர்வாகம் குறைமதிப்பிட்டுள்ளது அவர்களுக்கு புரிய வைக்கவேண்டும்.

எங்கள் மீது தாக்குதல் தொடுத்து, பயப்படுத்தலாம் என கனவு கண்டால், அதற்காக வருந்த நேரிடும், இது உறுதி-என்றார்.

வெளியான தகவல்களின்படி, ஒருவர் மட்டுமே காயமடைந்துள்ளார் எனவும் அனைத்து ஏவுகணைகளும் உக்ரேனிய வான் பாதுகாப்பு அமைப்புகளால் அழிக்கப்பட்டன எனவும் தெரியவந்துள்ளது.

ஆனால், ரஷ்யா தரப்பில், தங்கள் இலக்குகள் அனைத்தும் திட்டமிட்டபடி அழிக்கப்பட்டன என தெரிவித்துள்ளனர். (அ)



# எல் சல்வடோரின் முன்னாள் ஜனாதிபதிக்கு 14 வருட சிறை!

*சன் சல்வடோர், மே 31*

கடமைகளிலிருந்து விலகிய குற்றத்திற்காக எல் சல்வடோரின் முன்னாள் ஜனாதிபதி மொரிசியோ பூனஸ் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிக் குழுக்களுடன் தொடர்புகளை பேணியமை மற்றும் கடமைகளிலிருந்து விலகியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக முன்னாள் ஜனாதிபதி மொரிசியோ பூனஸிக்கு 14 ஆண்டுகளும் முன்னாள் நீதி அமைச்சர் டேவிட் முங்குயாவிற்கு 18 ஆண்டுகளும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி பதவியில் இருந்த அவர், தேர்தல் இலாபத்திற்காக திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவுடன் தொடர்புகளை பேணியுள்ளமை தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி தற்போது நிகரகுவாவில் வசித்து வருவதுடன் 2019 ஆம் ஆண்டு அவருக்கு அந்நாட்டு பிரஜாவுரிமையும் வழங்கப்பட்டது.

நிகரகுவா பிரஜையொருவர் வெளிநாடொன்றில் குற்றவாளியாக காணப்பட்டாலும் அவரை அந்த நாட்டிடம் ஒப்படைக்காமல் இருப்பதற்கான சட்டதிட்டங்களே நிகரகுவாவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)




# ஹிட்லரின் பென்சில் ஏலத்தில்

*பேர்ளின், மே 31*

ஹிட்லருக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் பென்சில் ஏலத்தில் விடப்படவுள்ளது.

குறித்த பென்சிலானது 80,000 பவுண்ட் வரையிலான தொகைக்கு ஏலத்தில் விற்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது அடுத்த மாதமளவில் வட அயர்லந்தில் உள்ள பெல்பாஸ்ட் நகரில் ஏலம் விடப்படவுள்ளது.

1941 ஆம் ஆண்டு இந்தப் பென்சிலை ஹிட்லருக்கு 52 ஆவது பிறந்த நாள் பரிசாக அவரின் நீண்ட நாள் காதலி எவா பிரான் கொடுத்தார் எனக் கூறப்படுகிறது.

அதில் ‘எவா’ என்று ஜேர்மனிய மொழியிலும் “ஏ. எச்” என்ற எழுத்துகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பென்சிலை 2002 ஆம் ஆண்டு ஒருவர் ஏலத்தில் வாங்கினார், இது மீண்டும் ஜூன் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள புளூாம்போல்ட் ஏலத்தில் மீண்டும் விற்கப்படவுள்ளது.

இதேவேளை, அதனுடன் கையெழுத்திடப்பட்ட ஹிட்லரின் படம், விக்டோரியா அரசியார் வழங்கிய கையால் எழுதப்பட்ட மன்னிப்பு ஆவணம் ஆகியவையும் ஏலம் விடப்படும் என சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. (அ)

# அமெ. கோரிக்கை; நிராகரித்தது சீனா

*பீஜிங், மே 31*

இந்த வார இறுதியில் சிங்கப்பூரில் நடைபெறும் வருடாந்திர பாதுகாப்பு மன்றத்தில் தங்கள் பாதுகாப்புத் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பிற்கான அமெரிக்காவின் கோரிக்கையை சீனா நிராகரித்துள்ளது.

சிங்கப்பூரில் அடுத்த வாரம் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை ஷங்ரி-லா உரையாடல் என்று அழைக்கப்படுகிறது.

அமெரிக்க பாதுகாப்புச் செயலாளருக்கும் சீனப் பாதுகாப்பு செயலாளருக்கும் இடையிலான சந்திப்பிற்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த அழைப்பை நிராகரித்துள்ள சீனா, அதற்கான காரணத்தை இதுவரை தெரிவிக்கவில்லை.

2018 ஆம் ஆண்டு தற்போதைய சீன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இந்நிலையிலேயே இந்த விவாதத்தை சீனா நிராகரிக்க ஒரு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (அ)

# உணவு பணவீக்கம் பிரிட்டனில் உச்சம்!

## ஆய்வில் முக்கிய தகவல்

*லண்டன், மே 31*

பிரித்தானியாவின் உணவுப் பணவீக்கம் உச்சத்தை எட்டியுள்ளது என ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

நாட்டில் உணவுப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு, செவ்வாய்க்கிழமை அதன் உச்சத்தை எட்டியதற்கான அறிகுறிகளைக் காட்டியுள்ளது.

பிரிட்டன் சில்லறை வணிகக் கூட்டமைப்பு மற்றும் நீல்சன் நடத்திய ஆய்வில், ஒரு வருடத்திற்கு முன்பு உணவுக்காக சுமார் 20 பவுண்ஸ் செலவழித்த ஒருவர் இப்போது அதே பொருட்களுக்கு 23 பவுண்ஸூக்கு மேல் செலவழிக்கிறார்.

ஏப்ரல் மாதத்தில் காணப்பட்ட உணவுப் பணவீக்கத்தை விட மே மாதத்தின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், இது இந்த ஆண்டின் இரண்டாவது வேகமான அதிகரிப்பு ஆகும்.

ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்கு இடையே கடைகளில் ஒட்டுமொத்த உணவு பணவீக்கம் 8.8 சதவீதத்தில் இருந்து 9 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று பிரிட்டிஷ் சில்லறை வணிகக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நீல்சன் ஐ.கியூ நிறுவனத்தின் வணிக நுண்ணறிவுத் தலைவர் மைக் வாட்கின்ஸ் கூறுகையில்-
”பணவீக்கத்தின் தாக்கத்தைத் தணிக்க, கடைக்காரர்கள் பருவகால விளம்பரங்களைத் தேடுவதன் மூலமும், சூப்பர்மார்க்கெட்களில் வழங்கப்படும் பொருட்களின் விலைக் குறைப்புகளைப் பயன்படுத்தியும் பணத்தை மிச்சப்படுத்துகிறார்கள்”-என்றார். (அ)





# சரிவடையும் அபாயத்தில் கருங்கடல் தானிய ஒப்பந்தம்

## ரஷ்யா கடும் எச்சரிக்கை

*மொஸ்கோ, மே 31*

ரஷ்யாவின் தானியங்கள் மற்றும் உர ஏற்றுமதிக்கான தடைகள் குறித்து ஐ.நாவுடன் உடன்படிக்கை நிறைவேற் றப்படாவிட்டால், கருங்கடல் தானிய ஒப்பந்தம் செயல்படாது என அந்நாட்டின் வெளியறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்தார்.

அதாவது கடந்த ஆண்டு ஜூலையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ரஷ்யாவின் தானியங்கள் மற்றும் உரம் ஏற்றுமதிக்கு மூன்று ஆண்டுகளுக்கு தடைகள் நீட்டிக்கப்பட்டால், அதை சமாளிக்க ஐ.நா உதவ வேண்டும். இதற்காக ஐ.நாவுடன் உடன்பாடு எட்டப்படவேண்டும்.

இந்நிலையில், நைரோபிக்கு விஜயம் செய்த லாவ்ரோவ், இந்த மாதம் மாஸ்கோ கருங்கடல் தானிய ஒப்பந்தத்தை மேலும் இரண்டு மாதங்களுக்கு, அதாவது ஜூலை 17 வரை நீட்டிக்க தயக்கத்துடன் ஒப்புக் கொண்டது.

இருப்பினும் அதன் சொந்த நலன்களை முன்னேற்ற இன்னும் முன்னேற்றம் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஒப்பந்தத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்ட தானியங்களில் 3மூ க்கும் குறைவானது உலகின் ஏழ்மையான நாடுகளுக்கு சென்றடைவதாகவும் அவர் கூறினார். (அ)

# சென்னை சூப்பர் கிங்ஸ் 5ஆவது தடவை சம்பியன்!



அகமதாபாத், மே 31

ஐந்தாவது முறையாக ஐ. பி. எல். கிண்ணம் வென்று சாதனை செய்துள்ளது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்று சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

215 ஓட்டங்கள் என்ற இலக்கை சென்னை துரத்திய நிலையில் ஷமி வீசிய முதல் ஓவரில் 3 பந்துகளை ருதுராஜ் கெய்க்வாட் சந்தித்து ஒரு பௌண்ட்ரி விளாசினார். அப்போது மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது. நீண்ட நேரம் மழை பெய்ததால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. இதனால் ஓவர்கள் குறைக்கப்பட்டன. 15 ஓவர்களில் சென்னை அணி வெற்றிபெற 171 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டன.

இதன்படி, களம்புகுந்த ருதுராஜ் கெய்க்வாட் - டெவன் கொன்வே இணையர் வழக்கத்துக்கு மாறாக அதிரடியை தொடங்கினர். கெய்க்வாட் நிதானம் காண்பிக்க, கொன்வே வாணவேடிக்கை நிகழ்த்தினார். இருவரும் தனிப்பட்ட முறையில் பெரிய ஓட்டங்களை எடுக்கவில்லை என்றாலும் நல்ல இணைப்பாட்டம் அமைத்தனர். 6.3ஆவது ஓவரில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 74 ஓட்டங்களாக இருந்தபோது ருதுராஜ் கெய்க்வாட் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கிட்டத்தட்ட இந்த ஓவர் குஜராத் ரைட்டன்ஸூக்கு திருப்புமுனையாக அமைந்தது.

நூர் அகமது வீசிய இதேஓவரின் கடைசி பந்தில் 47 ஓட்டங்கள் எடுத்திருந்த கொன்வேயும் ஆட்டம் இழந்தார். இதன்பின் ரஹானேவும், ஷிவம் துபேவும் கூட்டணி சேர்ந்தனர். ரஹானே ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடினார். ரஹானேவும் துபேவும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை மெல்ல உயர்த்தினர்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் குஜராத்துக்கு முடிவை மாற்ற வல்ல பந்துவீச்சாளராக விளையாடி வரும் மோஹித் சர்மா இந்தமுறையும் அதேபோல் செயல்பட்டார். தனது முதல் ஓவரின் கடைசி பந்தில் 27 ஓட்டங்கள் எடுத்திருந்த ரஹானேவை ஆட்டமிழக்க செய்தார். இரண்டாவது ஓவரில் அடுத்தடுத்த பந்தில் அம்பதி ராயுடு, டோனி என ஆட்டமிழக்க செய்து சென்னையின் வெற்றிக் கிண்ண கனவுக்கு முட்டுக்கட்டை போட்டார்.

கடைசி ஓவரையும் மோஹித் சர்மாவே வீசினார். வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட முதல் பந்தே யோர்க்கர் வீசியவர், அடுத்த மூன்று பந்துகளையும் சிறப்பாக வீசி களத்தில் இருந்த துபேவையும் ஜடேஜாவையும் திணறடித்தார். இறுதியில் கடைசி இரண்டு பந்துகளில் 10 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற நிலை வர ஐந்தாவது பந்தில் சிக்ஸர் அடித்தார் ஜடேஜா. கடைசி பந்தை பௌண்ட்ரி அடிக்க சென்னை அணி ஐந்தாம் முறையாக சம்பியன் வென்றது.

15 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து சென்னை அணி 171 ஓட்டங்கள் இலக்கை தொட்டது. ஜடேஜா 15 ஓட்டங்களும், ஷிவம் துபே 32 ஓட்டங்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடைசிப் பந்து வரை த்ரில் ஆக சென்ற ஆட்டத்தால் கடைசி பந்தில் என்ன நடந்தது என்பதை டோனி பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை பந்துவீச்சை தெரிவு செய்தது. குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரராக களமறிங்கிய விரித்திமன் சஹா 2ஆவது ஓவரில் அழகாக ஒரு பிடியெடுப்பு வாய்ப்பை கொடுத்தார். ஆனால், தீபக் சஹார் கையிலிருந்து நழுவிய அந்த பந்து சென்னை ரசிகர்களின் ஏமாற்றத்துக்கு உள்ளானது. அடுத்து 4ஆவது ஓவரில் சஹார் வீசிய பந்தில் நேரடியாக சஹாருக்கே ஷூப்மன் கில் ஒரு பிடியெடுப்பு வாய்ப்பை கொடுத்தார். அதிலும் கோட்டைவிட்டார் சஹார்.

இந்த பிடியெடுப்புகள் தவறவிடப்பட்டதைத் தொடர்ந்து விரித்திமன் சஹா - ஷூப்மன் கில் இணை கலந்துகட்டி அடித்தனர். 32 பந்துகளில் 50 ஓட்டங்களைச் சேர்த்தனர். கிடைக்கும் இடைவெளிகளில் அடித்துக்கொண்டிருந்த இந்த இணைக்கு 6ஆவது ஓவர் ஆபத்தாக அமைந்தது. 6ஆவது ஓவரில் 2 ரன் அவுட்கள் தவறவிடப்பட்டன. ஆனாலும், ரவீந்திர ஜடேஜா வீசிய கடைசி பந்து ஷூப்மன் கில்லைத் தாண்டி டோனியின் கைக்கு சென்றது. அடுத்த நிமிடத்தில் ஸ்டம்பின் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. 20 பந்துகளில் 39 ஓட்டங்களுடன் வெளியேறினார் கில். சாய் சுதர்சன் களத்துக்கு வந்தார். 10 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்த குஜராத் 86 ஓட்டங்களை சேர்த்திருந்தது.

குஜராத்தின் மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான சஹாவின் விக்கெட்டும் தீபக் சஹார் பந்தில் அரங்கேறியது. 39 பந்துகளில் 54 ஓட்டங்களை சேர்த்த விரித்திமன் சஹா தீபக் சஹார் வீசிய பந்தை தூக்கி அடிக்க அது நேராக டோனியின் கைக்குள் அடைக்கலம் புகுந்தது. வெளியேறினார் சஹா. சஹா, கில் ஸ்ரீ சாய் சுதர்சன் என சொல்லும் அளவுக்கு அமைந்து அவரின் ஆட்டம். வெறித்தனமாக ஆடிய அவர், சென்னையின் பந்துகளை பௌண்ட்ரிக்கு அனுப்பவதிலேயே குறியாக இருந்தார்.

இதனிடையே தேவையான நேரங்களில் சிக்ஸர்களையும் அடித்து குஜராத் ரசிகர்களுக்கு குதூகலத்தை ஏற்படுத்தினார். குறிப்பாக 16ஆவது ஓவரில், 3 பௌண்ட்ரி, 1 சிக்ஸர் என விளாசி துஷார் தேஷ்பாண்டே ஓவரை ஒன்றுமில்லாமல் ஆக்கினார். கூடவே ஹார்திக் பாண்டியா அடித்தால் சிக்ஸ்தான் என இரண்டு சிக்ஸர்களை விளாசினார்.

பத்திரண வீசிய 19ஆவது ஓவரை சிக்ஸருடன் தொடங்கி வைத்தார் சாய் சுதர்சன். இரண்டாவது பந்தும் சிக்ஸ். 3ஆவது பந்தில் ஆட்டமிழப்பு. 47 பந்துகளில் 6 சிக்ஸர்களுடன் 96 ஓட்டங்களை விளாசிய சாய் சுதர்சனின் இந்த ஆட்டம் அவரின் தொழில்முறை வாழ்வில் முக்கியமான ஆட்டமாக அமைந்தது.

அடுத்து வந்த ரஷித் கான் கடைசி பந்தில் தூக்கி அடிக்க அது பிடியெடுப்பாக, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்களை இழந்த குஜராத் 214 ஓட்டங்களை குவித்தது. இதன்மூலம் சென்னைக்கு 215 ஓட்டங்கள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சென்னை அணி தரப்பில் மதீஷ பத்திரண 2 விக்கெட்களையும், ரவீந்திர ஜடேஜா, தீபக் சாஹர் ஆகியோர தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



## ரசிகர்களின் அன்புக்கு நான் தரக்கூடிய பரிசு இன்னொரு தொடர்!

### சென்னை அணியின் டோனி

அகமதாபாத், மே 31

ஐ. பி. எல். கிண்ணத்தை வென்று அசத்தியுள்ளது சென்னை சுப்பர் கிங்ஸ். பரபரப்பான இறுதியாட்டத்தில் கடைசி ஓவரில் கடைசி பந்தில் சென்னை அணி த்ரில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

வெற்றிக்கு பின் பேசிய சென்னை அணியின் தலைவர் டோனி, “சொல்லப்போனால், ஓய்வை அறிவிக்க இதுவே சிறந்த நேரம். இப்போதே ஓய்வை அறிவிப்பது எளிதான விடயம், ஆனால் 9 மாதங்கள் கடினமாக உழைத்து மேலும் ஒரு தொடரில் விளையாட முயற்சிப்பது பெரிய சவாலாக இருக்கும். அதற்கு எனது உடல் தாங்க வேண்டும். எல்லாம் உடல் ஒத்துழைப்பை பொறுத்துள்ளது. அதை முடிவு செய்ய இன்னும் 6-7 மாதங்கள் உள்ளன. நான் பெற்ற அன்பின் அளவுக்கு என்னால் அவர்களுக்குத் திருப்பி தரக்கூடிய பரிசு என்பது இன்னும் ஒரு தொடர் அவர்களுக்காக விளையாடுவதுதான்” என்று பேச்சை தொடங்கினார்.

அப்போது வர்ணனையாளர் ஹர்ஷா போக்ளே, “வெற்றி, தோல்வி எதுவாக இருந்தாலும் உங்களிடம் இருந்து சாதாரணமாக எந்தவிதமான உணர்ச்சியும் வெளிப்படாது. இதற்கு முன் சென்னையில் ஒருமுறை உங்களிடம் பேசும்போது முதன்முறையாக ரசிகர்களை பார்த்து நீங்கள் உணர்ச்சிவசப்பட்டதை பார்த்தேன்” எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த டோனி, “ஒரு உண்மை, இது எனது தொழில்முறை வாழ்வின் கடைசி கட்டம். இந்தத் தொடரின் முதல் போட்டி இங்குதான் தொடங்கியது. முதல் ஆட்டத்தில் விளையாடும்போது மொத்த மைதானமும் எனது பெயரை உச்சரிக்கும் போது என் கண்களில் நீர் நிறைந்தது. என்னை அமைதிப்படுத்திக்கொள்ள டக் அவுட்டில் சிறிது நேரம் உட்கார்ந்துபோது இதை அழுத்தமாக இல்லாமல், இதை நான் அனுபவிக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன். இதேதான் சென்னையிலும் கடைசி போட்டியில் நடந்தது. இதெல்லாம் மீண்டும் நடக்கும், மீண்டும் போட்டிகளில் விளையாடலாம் என நினைக்கிறேன். எதுவானாலும் நடக்கலாம் - என்றார்.



## இருபது - 20 கிரிக்கெட்டில் டோனி புதிய சாதனை!

அகமதாபாத், மே 31

இந்தியன் பிறீமியர் லீக் 2023 இறுதி போட்டியில் சென்னை அணியின் தலைவரும் விக்கெட் காப்பாளருமான மகேந்திர சிங் டோனி இருபது - 20 கிரிக்கெட்டில் 300 வீரர்களை ஆட்டமிழக்கச் (பிடியெடுப்பு மற்றும் ஸ்ரொம்ப்) செய்து இருபது -20 கிரிக்கெட்டில் அதிக வீரர்களை ஆட்டமிழக்கச் செய்த வகையில் கிரன் பொலார்டுக்கு அடுத்த இடத்தில் இருக்கிறார்.

இந்த ஐபிஎல் தொடரின் /ப்மன் கில்லை தோனி பிளாஷ் ஸ்ரொம்பிங் செய்த போது 301 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்தார். இதில் 214 வீரர்களை பிடியெடுப்பு மூலமாகவும் 87 வீரர்களை ஸ்ரொம்பிங் செய்தும் வெளியேற்றி சாதனை புரிந்துள்ளார். கில்லை ஸ்ரொம்ப் செய்ததோடு சக விக்கெட் காப்பாளர் விரித்திமான் சஹாவை வெளியேற்ற பிடியெடுப்பும் செய்தார் தோனி.

இந்த வகையில் இருபது -20 கிரிக்கெட்டில் முதலிடத்தில் இருப்பது கிரன் பொலார்ட். மும்பை இந்தியன்ஸின் முன்னாள் சகலதுறை வீரரான அவர், இருபது - 20 கிரிக்கெட்டில் 345 பிடிகளை எடுத்து ஆகச்சிறந்த களத் தடுப்பாளராகத் திகழ்கிறார். (ஐ)

# புதுக்குடியிருப்பில் குளத்தை ஆக்கிரமிக்கிறார் தனி நபர்!





## மக்கள் எதிர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, மே 31

**முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் உடையார்கட்டு கமநலசேவைத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குளமாக வெள்ளப்பள்ளம் குளத்தை தனியார் ஆக்கிரமிப்பதை எதிர்த்து நேற்று முன் தினம் அங்கு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.**

இந்தக் குளம் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது.

இந்தக் குளத்தை தனிநபர் ஒருவர் அபகரித்து எல்லைக் கற்கள் போட்டு வேலி அடைத்து வைத்துள்ளதால் அதனை மீட்க கிராம மக்கள் போராடி வருகின்றனர்.

நேற்று முன் தினம் காலை வெள்ளப்பள்ளம் குளப் பகுதியில் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றைம் நடத்தினர்.

பதாதைகளை தாங்கியவாறு எதிர்ப்பில் ஈடுபட்ட அவர்கள், அங்கு நாட்டப்பட்ட தூண்களை அகற்றினர்.

இதனை தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு சென்ற மக்கள் அங்கு பிரதேச செயலகம் முன்பாக எதிர்ப்பை வெளிப்படுத்தி மனு ஒன்றை பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

இதன்போது குறித்த குளம் தொடர்பில் பிரதேச செயலாளர் மக்களுக்கு தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தார்.

குள ஆக்கிரமிப்பு தொடர்பில் மேலதிகாரிகளிடம் தெரியப்படுத்தி மேலும் ஆராயவுள்ளோம். முதல் நடவடிக்கையின் படி குளம் அமைந்துள்ள காணி தனியார் காணியாகக் காணப்படுகின்றது. குளத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு விவாசாய திணைக்களத்திடம் இருக்கின்றது. மேலதிகமாக என்ன செய்யலாம் என்பது தொடர் பில் அரசாங்க அதிபருடன் கலந்துரையாடவுள்ளேன் -என்றார். (அ)



## தொழிலாளர் சட்டத்தை திருத்த விசேட கூட்டம்

கொழும்பு, மே 31

தொழிலாளர் சட்டத்தை திருத்துவது தொடர்பாக விசேட கூட்டமொன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக தொழிற்சங்கங்களின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நம் நாட்டின் தொழிலாளர் சட்டம் மிகவும் பழமையானது. இது திருத்தப்படவேண்டும். சிறிய மாற்றங்களைச் செய்தாலும், நவீன உலகத்திற்கு ஏற்றவாறு தொழிலாளர் சட்டம் முழுமையாகத் திருத்தப்படவில்லை.

இது தொடர்பான உடன்படிக்கையுடன் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். ஆகவே தொழிலாளர் சட்டத்தை திருத்துவதற்கான விவாதங்களில் தொழிற்சங்கங்கள் பங்கேற்பது அவசியமாகும்-என்றார். (அ)

## ஆங்கில வகுப்புக்கு சென்ற பல்கலை. மாணவி மாயம்!

கொழும்பு, மே 31

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் ஆங்கிலச் சான்றிதழ் கற்கைநெறியை பயின்று வந்த மாணவி ஒருவரை காணவில்லை என அவரின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

களுத்துறை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய மாணவியே காணாமல்போயுள்ளார் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்க ப்பட்டுள்ளது.

ஆங்கில வகுப்பிற்குச் செல்வதாக தெரிவித்து வீட்டிலிருந்து வெளியேறியதுடன் மீண்டும் வீட்டுக்கு வருகை தரவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவியின் கையடக்கத் தொலைபேசியும் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

காணாமல்போனதாக தெரிவிக்கப்படும் மாணவி தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்துள்ள பொலிஸார், இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## இந்தியாவிலிருந்து நாளொன்றுக்கு 10 இலட்சம் முட்டைகள் இறக்குமதி

கொழும்பு, மே 31

இந்தியாவில் உள்ள ஐந்து கோழிப்பண்ணைகளில் இருந்து தினமும் பத்து லட்சம் முட்டைகளை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக வணிக, பல்வேறு சட்டபூர்வ கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள கோழிப் பண்ணைகளுக்கு விஜயம் செய்த கால்நடை உற்பத்தித் திணைக்களம் மற்றும் அரச வர்த்தக சட்ட கூட்டுத்தாபனத்தின் மூன்று அதிகாரிகள் வழங்கிய அறிக்கையின் பிரகாரம் மேலும் மூன்று பண்ணைகளில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்களுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார். (அ)

## பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்படும்

### ஷெஹான் சேமசிங்க கூறுகிறார்

கொழும்பு, மே 31

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



அத்துடன் 350 மில்லியன் டொலர் கடனுதவி வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளமைக்கு அவர் நன்றி கூறினார்.

நிதி நெருக்கடியின்போது அடிப்படைத் தேவைகளுக்கும் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய அவசர உதவிகளை இலங்கை பெரிதும் மதிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். (அ)

## வடக்கில் வீதி விபத்துக்களால் மே மாதம் 16 பேர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 31

வடக்கு மாகாணத்தில் இந்த மாதத்தின் முதல் 29 நாள்களில் மாத்திரம் வீதி விபத்துக்களால் 16 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாத்திரம் 10 பேர் உயிரிழந்துள்ளமை தரவுகளிலிருந்து தெரியவருகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 10 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பேரும், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தலா ஒவ்வொருவருமாக 16 பேர் இந்த மாதத்தில் முதல் 29 நாள்களிலும் உயிரிழந்துள்ளனர். (அ)

## இலங்கை - மாலைதீவு புரிந்துணர்வு ஒப்பந்தம்

கொழும்பு, மே 31

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்காக உருவாக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளது.

இதன்படி, உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

## நாட்டில் ...

சில் வைத்து நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான பாதையை நோக்கி நாடு சென்றுகொண்டிருக்கும் தருணத்தில், நாட்டில் மீண்டும் ஒரு நெருக்கடியை ஏற்படுத்த முயற்சி எடுக்கப்படுகின்றது.

மதப் பிரச்னைகளை தூண்டிவிட்டு - நிலவும் அமைதியான சூழ்நிலையைச் சீர்குலைக்கப் பல தரப்பினர் முயற்சித்து வருகின்றனர்.

தனி நபர் ஒருவரோ அல்லது குழுவினரோ மதவாத உணர்வுகளைத் தூண்டுவதற்கு அல்லது அதே நோக்கத்துடன் செயல்பட முயற்சித்தால் அவர்களுக்கு எதிராக, அரசியலமைப்பின் 9 சரத்து மற்றும் தண்டனை சட்டத்தின் 291 (அ), (ஆ) இன் பிரகாரம் கடுமையாக சட்டம் அமுல்படுத்தப்படும்.' - எனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (அ-ஐ)

## வவுனியா...

மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ் செழியன் குற்றவாளிக்கு நேற்று தீர்ப்பு அளித்தார்.

இதன்படி, அத்துமீறல், கொள்ளை உள்ளிட்ட முதல் 9 குற்றச்சாட்டுகளுக்கும் எதிரிக்கு 16 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படுவதுடன் 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்த உத்தரவிடப்பட்டது. தண்டப் பணம் செலுத்தாவிடின் இரண்டு மாத கடூழிய சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும்.

இருவரை கொலை செய்த 10, 11ஆவது குற்றங்களுக்காக இரட்டை தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. ஜனாதிபதி தீர்மானிக்கும் தினத்தில் - இடத்தில் எதிரியின் உயிர் உடலிலிருந்து பிரியும் வரை தூக்கிலிடப்படுவார்" என்று மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார். (ஐ-07)

## 2,000...

கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதற்கான வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் வெளியான தகவல் உண்மைக்கு புறம்பானது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் காணிகளை வனவள பாதுகாப்பு திணைக்களம் போன்ற எந்தவிதமான அரச திணைக்களங்களுக்கும் கொடுப்பதற்கான தீர்மானங்கள் எவையும் தற்போதைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை.

1985ஆம் ஆண்டிற்கு முன்னர் மக்களின் குடியிருப்புக்களாகவும் விவசாய நிலங்களாகவும் இருந்த அனைத்து காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கிறது - என்றும் அமைச்சர் கூறினார்.

அண்மையில் வட, கிழக்கை சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்து காணிகள் ஆக்கிரமிப்பு தொடர்பில் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மக்களே...

படாதிருக்க தொப்பியை அணிய வேண்டும்.

நேரடி சூரிய ஒளி அதிகமாக வெளிப்படுவது கண் நோய்கள் மற்றும் பிற பிரச்னை அபாயத்தை எழுப்புகிறது. மேலும், சில கண் நிலைகளை சன்கிளாஸ் அணிவதன் மூலம் தவிர்க்கலாம்.

நேரடி சூரிய ஒளியால் வாந்தி, தலை சுற்றல் அல்லது மயக்கம் ஏற்படலாம். அவ்வாறு ஏற்படின் மருத்துவரை நாடுவது சிறந்தது. நீரிழப்பை தடுப்பதற்கு தண்ணீர் மற்றும் திரவ பானங்களை அதிகம் அருந்த வேண்டும் என்றும் மருத்துவர் அறிவுறுத்தினார். (ஐ)

## ஓர் ஆண்டில்...

போன்றவையே இந்த மரணங்களுக்கு காரணம் என்று கடற்படையால் கூறப்பட்டது.

இதன்படி, 111 மரணங்கள் கவனக் குறைவு - நீர் நிலை குறித்து போதிய அறிவின்றி செயல்பட்டமையால் ஏற்பட்டன. 18 மரணங்கள் மீன்பிடியின் போதான அசம்பாவிதங்களால் நிகழ்ந்தன. 19 மரணங்கள் தவறான முடிவு எடுத்ததால் விளைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், நீர் நிலைகள் குறித்து எப்போதும் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு கடற்படை அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## ஓகஸ்டில்...

கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், அனுமதி கிடைத்த பின்னர் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றும் கூறினார். (ஐ)

## இறக்குமதியாகும்...

ஆரோக்கியத்துக்கு பாதிப்பை விளைவிப்பதால், இறக்குமதி செய்யப்படும் பழங்களில் உலோக பதார்த்தங்கள் காணப்படுகின்றதா என்பதை பரிசோதிப்பதை கட்டாயமாக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் பழங்களில் காணப்படும் உலோக பதார்த்தங்களின் அளவை பரிசோதிப்பது ஜூன் முதலாம் திகதி முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பழங்களில் காணப்படும் ஈயம் மற்றும் உலோகப் பதார்த்தங்கள் குழந்தைகளின் மூளை நரம்புகளை பாதிக்கவல்லன. இது வலிப்பு நோய், கோமா நிலையை ஏற்படுத்துவதுடன் மரணத்தையும் ஏற்படுத்தக்கூடியது. தப்பிப் பிழைப்போரும் அறிவுசார் இயலாமை, நடத்தை சிக்கல்களால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ)

## இலங்கையின்...

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடன், அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் என்று பிரதமர் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு சீனா ஆதரவளிக்கும். அதேநேரம், பொருளாதார உதவிகளையும் தொடர்ந்து வழங்கும். பல தரப்பினரின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் இலங்கை ஒரே சீனா கொள்கையை கடைப்பிடித்தமைக்கு இலங்கைக்கு நன்றியையும் சீன வெளிவிவகார பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின், வர்த்தக, துறைமுக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளில், முதலீடுகளை அதிகரிக்க, சீனா எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சீனாவின் வெளிவிவகார பிரதி அமைச்சர் சென் வெய் டாங் கூறியுள்ளார். (ஐ)

## 4,200...

ணத்தில் 4 ஆயிரத்து 200 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது, இதற்கு நிரந்திர தீர்வு காண்பதற்காக ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கிழக்கு ஆளுநர் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

செந்தில் தொண்டமானின் கோரிக்கையை ஏற்று, ஆசிரியர் பற்றாக் குறையை கூடிய விரைவில் நிவர்த்தி செய்வதாக உறுதிளித்த கல்வி அமைச்சர், அதற்கு முதல் கட்டமாக மூன்று மாதங்குளுக்குள் பட்டதாரி ஆசிரி யர்கள், கல்வியியல் கல்லூரியில் இருந்து வெளியாகும் ஆசிரியர்களை கொண்டு பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் வழங்குவதாக உறுதியளித்தார். (ஐ)

# காலக்கெடு விதித்து பொதுஜன பெரமுன எம். பிக்கள் அமைச்சுக்காக காத்திருப்பு

### சுதந்திர மக்கள் காங்கிரஸ் எம். பி.

கொழும்பு, மே 31

பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அமைச்சு பதவியை பெறுவதற்கு காத்திருக்கின்றனர். அதற்காக அவர்கள் காலக்கெடு விதித்துள்ளனர் என்று பொதுஜன பெரமுன ஊடாக பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டு தற்போது சுயாதீனமாக செயல்படும் லலித் எல்லாவெல எம். பி. தெரிவித்துள்ளார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸ் பணிமனையில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அமைச்சுப் பதவி கிடைக்காத பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அமைச்சு பதவிகளை தேடி பின்னால் ஓடுகின்றனர். 25, 30 அல்லது 35 வருடங்கள் அமைச்சு பதவிகளை வகித்தவர்களே நாட்டை அழிவு பாதைக்கு கொண்டு சென்றனர்.

அவர்களாலேயே இந்த அரசாங்கம் அழிவுக்கு சென்றது. மொட்டுக் கிட்சி அழிவுக்கு சென்றது. அவர்களே இன்று அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்வ தற்காக ரணில் விக்கிரமசிங்கவின் பின்னால் ஓடுகின்றனர்.

அமைச்சுப் பதவிகளை வழங்காவிட்டால், 15 நாட்களில் 52 பேருடன் எதிர்க்கட்சி தரப்பில் அமர்வோம் என்று கூறியுள்ளனர். ஏன் இவ்வாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். மக்களின் பிரச்னையை தீர்க்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. அமைச்சுப் பதவியின்றி இருக்கமுடியாது. சலுகைகள் இன்றி அவர்களுக்கு இருக்கமுடியாது. தாம் உழைக்கும் வருமானம் குறைந்துள்ளமையால் அவர்களுக்கு அமைச்சு பதவி தேவைப்படுகிறது - என்றார். (ஐ)

# சீன வெளிவிவகார பிரதி அமைச்சர் எதிர்க்கட்சி தலைவருடன் சந்திப்பு!



கொழும்பு, மே 31

சீன மக்கள் குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான 12 ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைகளுக்கு இணைத் தலைமை வகிப்பதற்கு இலங்கைக்கு வருகை தந்துள்ள சீனா வெளிவிவகார பிரதி அமைச்சர் சன் வெய்டாங் உள்ளிட்ட வெளிவிவகார அமைச்சின் தூதுக்குழுவினர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்தார்.

இரு தரப்பு ரீதியாக நிலவி வரும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு, இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் உற்பத்தித் தொழில் புரட்சியை அடுத்த கட்டத்திற்கு முன்கொண்டு செல்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது கோரிக்கை விடுத்தார்.

சீன பொருளாதார புரட்சி தொடர்பான முன்னோடிகளை கருத்தில் கொள்வது போல பிராந்திய அமைதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

பிராந்திய அமைதி மற்றும் நல்லிணக்கம் போலவே ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தும் சர்வதேச உறவுகளை கட்டியெழுப்புவது தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் சீன பிரதி வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் இந்த கலந்துரையாடல் இடம் பெற்றது. (ஐ)

## மத கலவரம்...

எடுக்கப்படவேண்டும்.

அனைத்து சமூகங்களும் இணைந்து வாழ்வதற்கான அமைதியான சூழலை உறுதி செய்வதற்கு தேவையான உத்தரவுகளை ஜனாதிபதியால் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் - என்றார். (அ - ஐ)

## சமூக...

குணவர்த்தன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இருந்து அரசாங்கம் பாடம் கற்றுள்ளது. ஆகவே, இவ்வாறான செயல்பாடுகளுக்கு தீர்வு காண தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும். அப்பாவி மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு நிகழ்வுக்கும் அல்லது சம்பவத்துக்கும் அரசாங்கம் இடமளிக்காது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# யானை தாக்கி இருவர் மரணம்

கொழும்பு, மே 31

திருகோணமலை, அநுராதபுரத்தில் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

திருகோணமலை, குமரன்கடவை பிரதேசத்தில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 64 வயதுடைய பக்மீகம பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மதவாச்சி, பூனேவ - ஹல்மில்லேவ பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

தனது காணிக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந்தவரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

## மாட்டிறைச்சி...

தொற்று நோய் பரவி வருகின்றது.

இந்தப் பகுதிகளில் விற்பனையாகும் மாடுகளின் இறைச்சியை உட்கொள்ள வேண்டும் என்று கால்நடை சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, வடமேல் மாகாணத்திலிருந்து கால்நடைகளை வெளியிடங்களுக்கு கொண்டு செல்லதடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 1 பில்லியன் டொலர் கடனை நீடிக்க இந்தியாவுடன் இலங்கை ஒப்பந்தம்

கொழும்பு, மே 31

**அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இந்தியா வழங்கிய 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை ஒரு வருட காலத்துக்கு நீடிப்பதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை நேற்று கைச்சாத்திட்டுள்ளது.**

**இந்திய ஸ்டேட் வங்கியின் அதிகாரிகளின் பங்கேற்புடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க உறுதிப்படுத்தினார்.**

முன்னதாக இதற்கான ஆரம்ப ஒப்பந்தம் 2023 மார்ச்சில் கைச்சாத்திடப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். இந்தியா வழங்கிய 1 பில்லியன் டொலர் கடனில் இருந்து இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையில் 576.75 மில்லியன் அமெரிக்க டொலர்களை மட்டுமே இலங்கை பயன்படுத்தியுள்ளது.

எஞ்சியுள்ள 423.25 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலும் ஒரு வருடத்திற்கு பயன்படுத்த இலங்கைக்கு அனுமதி வழங்குவதே இந்த உடன்படிக்கை என செஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை முன்னுரிமை அளிக்கும் என்றும் செஹான் சேமசிங்க கூறினார். (அ)

# அதிகரிக்கும் விபத்து மரணங்கள் ஒருங்கிணைப்புக் குழு ஆராயும்!

## யாழ். மாவட்ட செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்து செல்லும் வீதி விபத்துகள் தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று யாழ். மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இந்த மாதத்தில் மாத்திரம் விபத்துகளில் 10 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நகரில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்து குறித்து பல தரப்பினரும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலையில் இந்த விபத்துகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். மாவட்ட செயலரை தொடர்புகொண்டு கேட்ட போது,

"வீதி விபத்துக்கள் தொடர்பில் நாளை (இன்று) புதன்கிழமை நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படும்", என்று குறிப்பிட்டார். கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் வீதி விபத்துகள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தாலும் உறுதி யான தீர்மானம் எதுவும் எட்டப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையி லேயே இன்றைய தினம் மீளவும் அது தொடர்பில் ஆராய்ந்து தீர்மா னம் எடுக்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# அவுஸ்திரேலியாவின் அடிலெய்டில் பௌத்த விகாரைக்குள் திருட்டு!

கான்பரா, மே 31

அவுஸ்திரேலியாவின் அடி லெய்டில் உள்ள இலங்கையின் பௌத்த விகாரைக்குள் பிரவே சித்த ஒருவர், வழிபாட்டாளர் கள் வழங்கிய பணத்தைத் திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.இந்த சம்பவம் கடந்த வெள் ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது அவர் 3000 அவுஸ்திரேலியா டொலர்களை திருடிச்சென்றுள்ளமை சி.சி.ரி.வி கமரா மூலம் அடை யாளம் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர் ஏற்க னவே தெற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள மற்றொரு விகா ரையில் அண்மையில் பணத்தை திருடியவர் என்பதும் தெரியவந்துள்ளது.

தெற்கு அவுஸ்திரேலியா விகாரையில் இருந்து அவர் 800 டொலர்களை திருடிச்சென்ற தாக முறையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தென்னாபிரிக்க பாணியில் நல்லிணக்க ஆணைக்குழு!

## அனுமதியளித்தது அமைச்சரவை

கொழும்பு, மே 31

தென்னாபிரிக்க மாதிரியில் ஏற்பாடுகளை உள்ளடக்கி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதன்போதே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷவும், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் இணைந்து இதற்கான அமைச்சரவை பத்திரத்தை முன்வைத்துள்ளனர்.இது தொடர்பான அமைச்சரவை யோசனை வருமாறு:

தென்னாபிரிக்காவின் சர்வதேச தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சரின் அழைப்பின்பேரில் அந்த நாட்டின் உண்மை மற்றும் ஒருமைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பான ஆரம்பக் கற்கைகளை மேற்கொள்வதற்காக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் அந்த நாட்டுக்கு விஜயம் செய்திருந்தனர்.

குறித்த விஜயத்தின்போது தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி மற்றும் சர்வதேச தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் உள்ளிட்ட அந்நாட்டு அரச பிரதானிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

அதற்கமைய, தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் ஒருமைப்பாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு, எமது நாட்டில் உண்மை மற்றும் ஒருமைப்பாட்டு பொறிமுறையை தாபிப்பதற்காக இரு அமைச்சர்களும் இணைந்து தாக்கல் செய்த பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# வங்கி அதிகாரியின் திருடப்பட்ட சொகுசு காருடன் இருவர் கைது

கொழும்பு, மே 31

வங்கி அதிகாரி ஒருவரின் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான சொகுசு காரை திருடிய சந்தேக நபர்கள் இருவரை தலங்கம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தலவத்துகொடையில் உள்ள வைத்திய நிலையத்தின் கார் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வங்கி அதிகாரி ஒருவரின் காரே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

திருடப்பட்ட கார், காரை திருட ஸ்கான் செய்ய பயன்படுத்தப்பட்ட மென்பொருளுடன் கூடிய நவீன இயந்திரம், சந்தேக நபர்கள் திருட வந்த கார் மற்றும் சுமார் 2000 சிம் அட்டைகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 27 ஆம் திகதி இரவு, வைத்திய நிலையத்திற்கு சிகிச்சைக்காகச் சென்ற அத்துருகிரியவைச் சேர்ந்த வங்கி அதிகாரி ஒருவர், அங்குள்ள கார் நிறுத்துமிடத்தில் காரை நிறுத்திவிட்டு சிகிச்சைக்காகச் சென்ற பின், கார் நிறுத்திய இடத்துக்கு திரும்பி வந்து பார்த்தபோது அதனைக் காணவில்லை. அவர் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

இந்நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், காரை திருடிய இரு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் திருடப்பட்ட காரையும் மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு-கிழக்கில் கடும் வெப்பநிலை

கொழும்பு, மே 31

வெப்பமான காலநிலை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வெப்ப குறியீடு, மனித உடல் உணரும் வெப்ப அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# தெல்லிப்பழை விபத்தில் காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 31

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்பாக சைக்கிளில் வீதியை கடக்க முற்பட்டவர் விபத்தில் சிக்கி , சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தெல்லிப்பழை - கிரான் பகுதியை சேர்ந்த சடையன் பாலசந்திரன் (வயது 48) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்தவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்தார். (ஐ)

# வாக்காளர்கள் பட்டியலை விநியோகிப்பதில் தாமதம்

## கிராம அலுவலர்கள் வெற்றிடமே காரணம்

கொழும்பு, மே 31

கிராம சேவையாளர்களுக்காக நிலவும் வெற்றிடம் காரணமாகவே, இந்த வருடத்திற்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலை வீடுகளுக்கு விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்னாயக்க தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியலை பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த பணிகள் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் பூர்த்தி செய்யப்படவுள்ளதாக அவர் கூறினார். (அ)

# 24 மணி நேரத்தில் ஏற்பட்ட விபத்துகளில் ஐவர் மரணம்

கொழும்பு, மே 31

நேற்று காலை முடிவடைந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட்ட பகுதிகளில் இடம்பெற்ற விபத்துகளில் ஐவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மதியம் யாழ்ப்பாணம் நகரில் முட்டாசு கடை சந்தியில் லொறி மோதியதில் மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி - வெலிகண்டல் பகுதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து லொறியுடன் மோதியதில் 38 வயது நபர் உயிரிழந்தார்.

கண்டி - கம்பளை, குருகேலே சந்தியில் பஸ் மோதியதில் 60 வயதான பெண் உயிரிழந்தார். பஸ்ஸை விட்டு இறங்கி வீதியைக் கடக்க முற்பட்டவேளை, அவர் விபத்திற்கு உள்ளாகியிருந்தார்.

புத்தளம் - ஆனமடுவ, பெரியகுளம் பகுதியில் வேன் மோதியதில் 68 வயதான பாதசாரி ஒருவர் உயிரிழந்தார்.

அநுராதபுரம் - ஸ்வஸ்திபுர பகுதியில் வேன் விபத்துக்கு உள்ளானதில் 76 வயதான பெண் உயிரிழந்தார். இந்த விபத்தில் பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் இரண்டு சிறுவர்களும் காயமடைந்தனர். (ஐ)

# சீன பிரதி அமைச்சர் இலங்கைக்கு வருகை

கொழும்பு, மே 31

சீன வெளிவிவகார பிரதி அமைச்சர் சன் வெய்டாங், இலங்கை வந்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார செயலாளருடன் இரு நாடுகளுக்கும் இடையிலான 12ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைகளுக்கு இணைத் தலைமை தாங்குவதற்காகவே அவர் இலங்கை வந்துள்ளார்.

இந்த ஆலோசனைகள் நேற்று முன் தினம் ஆரம்பித்துள்ள நிலையில் நாளை வரை நடைபெறவுள்ளன.

இரு நாடுகளும் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசார ஒத்துழைப்பை உள்ளடக்கிய இருதரப்பு உறவுகளின் நிலையை மதிப்பிடுவதற்கு இந்த கலந்துரையாடல் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.